திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 2—9—55 : வெள்ளி : 14-பக்கங்கள் : விலை 3 அணு மலர் : 3.

நகர சபைத் தேர்தல்கள்

சென்னை மாநில அரசியலார் நகரசபைத் தேர்தல்களுக்கு நாட்கள் குறித்து அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். அதற்கேற்ப தேர்தலில் கட்சிகளின் பேரால் போட்டியிடுபவர்களும், தங்களின் சொந்த தகுதியை எடுத்துக் கூறி போட்டி யிடுபவர்களும் இப்பணியில் தங்களின் தீவிரத் தன்மையை வாக்காளர்களிடையே எடுத்துக் கூறி வருகின்றனர்,

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பொறுத்த வரை—பொதுச்செயலாளர் அவர்கள் கழகத்தின் நிலையை ஏற்கனவே பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டிருப்பதை வாக்காளர்கள் கூர்ந்து கவனித்திருப்பார்களென்றே நம்புகிறோம்.

அரசியலுக்கு முழு தொடர்புடைய சட்டசபை தேர்தல்களில் கட்சிகளின் சார்பில் போட்டியிடுவது இன்றியமையாததாகும். ஊராண்மைக் கழகம் நகராண்மைக்கழகம், மாவட்ட ஆட்சி மன்றங்களைப் பொறுத்த வரையிலுள்ள பணிகளானது ஆட்சி முறையை வகுப்பதோ ஆட்சிமுறையில் திருத்தம் செய்வதோ, அல்லது ஆட்சி முறையை மாற்றுவதோ அல்ல,

மக்களின் சுகாதாரப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் இந்த மன்றங்களிலே கட்சிப் பேச்சுகளுக்கும் அரசியல் அபிப்ராய பேதங்களுக்கும் சிறிதுகூட இடமில்லாமல் இருந்தால் தான் நகரசபைகளின் பணியும் மக்களுக்கு பயனுள்ளதாக அமையமுடியும்.

சிற்றூர்களில்—நகர்ப்புறங்களில் நல்ல பாதைகளும் விளக்குகளும் அமைதல் வேண்டும். ஏழைச் சிறுவர்களுக்கு கல்வித் துறையில் பேருதவி செய்ய வேண்டும் என்பனபோன்ற பிரச்னைகளில் எந்தக் கட்சியினருக்கும் அபிப்ராயபேதம் இருக்க முடியாது. ஒவ்வொரு வட்டமும் ஒழுங்குபெற காட்சியளிக்க வேண்டுமென்று காங்கிரஸ்காரர் கூறினால் இல்லை இல்லை வீதிகளெல்லாம் குப்பைகள் நிறைந்திதானிருக்க வேண்டுமென்று பிறகட்சியினர் கூற மாட்டார்கள். அதுபோலவே சோஷலிஸ்டு கட்சியினர் நகர சுகாதாரத்தைப் பொறுத்தவரை தமது அனுபவத்தைக் கூறும்போது மாற்றுக் கட்சியினர் மறுத்துவிட இயலாது.

எனவே இத்தகு பணிக்குக் கட்சிகளின் பலத்தைக் காட்ட முன்வருவதானது அரசியல் பிரச்னைகளை நீக்கி மற்ற துறைகளிலாகிலும் மக்கள் ஒருமித்த கருத்துடன் அல்லது மனவேறுபாடு இன்றி வாழும் உயர் தன்மைக்கே கேடு பயப்பதாகும்.

சட்டசபைகளைப் பொறுத்தவரை நமது கட்சியைத் தவிர பிற கட்சியினர் சென்றால் ஆட்சி முறையை பிற்போக்கானதாக மாற்றிவிடுவர் என்று ஒவ்வொரு கட்சியினரும்—கொள்கையுடையோரும் இபுறலாம், ஆனால் நகராண்மைக் கழகத்திற்குள்ள அதிகாரமும், அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் சற்று நடுநிலைமையிலிருந்து எண்ணிப் பார்க்கும் எவரும் கட்சிகளின் பேரால் போட்டியிடுவதோ அல்லது ஒரு குறிப்பிட்ட கோஷ்டியினர் நீண்ட காலமாக ஆதிக்கம் பெற்று வருவதோ நேர்மையற்ற செயல் என்றே கூறுவர்.

எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் நகராண்மைக் கழகத் தேர்தல்களில் கட்சியின் பேரால் போட்டியிடுவதை வெறுத்து வருகிறது.

ஓர் விளக்கம்

ஆனால் குறிப்பாக காங்கிரசார் மட்டும் ஊராண்மை, நகராண்மைக் கழகத் தேர்தல்களில் கூட தங்களின் கட்சி ஆதிக்கத்தைக் காட்டுவதிலிருந்து திருந்தும். அளவுக்கு இன்னும் மனவளம் பெறாதது குறித்து மிகவும் வருந்துகிறோம்.

இன்னும் சற்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் காங்கிரசாரோ இன்று ஆளும் வர்க்கத்தினராகக் காட்சி யளித்து வருகிறனர். அரசியல் துறையில் இருக்கும் முக்கிய நாற்காலிகளனைத்திலும் காங்கிரசாரே நிறம்பி யிருக்கின்றனர், பிரதம மந்திரி பதவியிலிருந்து மிகச் சாதாரண பதவிகள் அனைத்திலும் சர்வம் காங்கிரஸ் மயம்தான்!

இந்நிலையில் ஊராண்மைக் கழகம், நகராண்மைக் கழகம், மாவட்ட ஆட்சி மன்றங்களிலாவது கூடுமானவரை மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் அல்லது அப்பணியில் உண்மையிலேயே ஆற்றல் படைத்தவர்களுக்கும் இடமளித்தால் 1947-வது ஆண்டு மாடல் சுயராஜயம் எந்த வகையில் ஊசிவிடும் என்று கேட்கிறோம்!

காங்கிரசார் மேற்கண்ட மன்றங்களில் இடம் பெறவில்லையென்றால் நாடெங்கும் துர்நாற்றமடிக்குமா அப்படி ஏதாவது ஆண்டவன் கட்டளையோ சாஸ்திரத்தில் குறிப்போ அல்லது சுயராஜய அரசியல் சட்டத்தில் ஒரு பிரிவாகவோ யிருக்கிறதா—இல்லையே. இன்னும் சொல்ல வேண்டுமானால், நகர மன்றங்களில் காங்கிரசார் தங்களின் கட்சியின் பேரால் ஆதிக்கம் பெறுவதற்கு முன்பிருந்த தரம் இப்போது குறைந்து வருகிறது என்பதுதானே நடைமுறையில் காணப்படுகிறது.

எனவே இவையனைத்தையும் ஆரஅமர சிந்தித்துப் பார்த்தால் கட்சிகளின் பேரால் நகர மன்றங்களில் இடம் பெறுவோர்—அங்கேயும் கட்சி கண்ணோட்டத்துடன் காலத்தை வீணாக்குவதல்லாமல் பலவித தொல்லைகளுக்கிடையே வரிகொடுக்கும் பொதுமக்களின் காசையும் வீணாக்க முனைகின்றனர் என்று கூறின் மிகையாகாது.

சென்னை முதலமைச்சர் காமராசர் போன்றவர்கள் "சர்க்கார் தவறு செய்தால் மாற்றுக் கட்சியினர் எடுத்துக் கூறட்டும் திருத்தட்டும். அதுபோலவே சமயம் நேரும்போது பொதுத்துறையில் சர்க்காரோடு ஒத்துழைக்க முன்வரட்டும். இதற்கும் அப்பால் தாங்களே ஆட்சியில் அமர வேண்டுமானால் பொதுத் தேர்தலில் போட்டியிடட்டும்" என்றெல்லாம் ஓயாமல் உபதேசம் செய்வதில்மட்டும் குறைச்சலில்லை ஆனால் நடைமுறையிலே நகர மன்றங்களில் கூட காங்கிரசார் தங்களின் ஆதிக்கத்தைக் காட்டி வழிமறைத்து நிற்கின்றனர். காங்கிரஸ் தலைவர்கள் உண்மையிலேயே மனவளம் பெற்றிருந்தால் நகர மன்றங்களில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டுவாவது தங்களின் அபேட்சகர்களை நிற்கவைத்து மற்ற இடங்களை பிறருக்கு ஒதுக்கி வைக்கக் கூடாதாயென்று கேட்கிறோம்.

உதாரணமாக சென்னை நகரத்தில் 60 வட்டங்களென்றால் அதிகப்படியாக வேண்டுமானாலும் 30 வட்டங்களுக்குத் தங்களுக் குகந்தவர்களென்று கருதியுள்ளவர்களை கட்சியின் பேரால் இல்லாமல் பொதுவாக நிற்கவைத்து மிகுதி வட்டங்களில் பிற கட்சியினர் அல்லது தனிப்பட்டவர்கள் தங்களின் சொந்த அறிவாற்றலைக் கூறி இடம்பெற விட்டிருக்கக் கூடாதா! இவ்வித பெருந்தன்மை மற்ற கட்சிகளுக்கு இல்லாவிடினும் முதலாவதாக இருக்கவேண்டுவது ஆளும் கட்சியினருக்கல்லாவா யென்று கேட்கிறோம்.

ஆனால் அதற்கு நேர்மாறாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போன்ற மாற்றுக் கட்சிகளுக்கு அவ்வித பண்பு இருக்கிறது—ஆளும் வர்க்கமோ ஆதிக்க வெறியாட்டம் நடத்துகிறது.

எனவே நகரமன்றங்களைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கருத்தினை வாக்காளர்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இதற்கு முன்ன

8-ம் பக்கம்

வாசகர்களின் கருத்து!

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். திராவிடன் ஒன்பதாம் ஆண்டு துவக்க இதழையும் இரண்டாவது இதழையும் கண்டோம். களி மிகக்கொண்டோம், தேனுண்ட வண்டானோம். தோழர் திருவேடம் தரும் 'புறப்படுவோம் பஞ்சாப்' என்ற இன உணர்ச்சி கட்டுரை திராவிடத்தின் கொள்கைகள் வட நாட்டிலும் பரவி இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டு. பாலைவன—ரோஜா என்னும் தொடர் காவியம் மனதைக் கவரும் இன்ப ரோஜாவேதான். கோவாவும்—ஜீவாவும் என்ற தலைப்பில் எழுதியிருப்பது கம்யூனிஸ்ட்களுடைய புரட்டை அம்பலமாக்குகிறது. திராவிடப்பூங்கா என்ற தலைப்பில் தோழர் வந்தைவேள் மிக ஆற்றலுடன் எழுதி வருகிறார் திராவிடன் வாழ்க! வளர்க!!

இங்கனம்

கோ. கண்ணன், M. C. கோபால்.
மல்லீஸ்வரம்—பெங்களூர்,

3

(4-வது காட்சியின் தொடர்ச்சி...)

[கோபாவேசத்தோடு வெளியே நிக்கொண்டிருந்த பலவேசத்தின் நிலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டே மாளிகைக்குள்ளே நுழைகிறுர் திகம்பரர்]

தி : என்னடி! தம்பி பார்வையிலே நெருப்பு பறக்குது...

அகி ; பார்வையிலே என்னுங்க நம்ம நெஞ்சலேயுந்தான் நெருப்புப் பிடிச்சுக்கப் போவுது.

தி : என்னடி...பட்டனத்தாராகுறே! ஏன்டா மானத்தை வாங்குறே யோக்யமா இருடான்னு சொல்லிவச்சியா! அது எங்கே கேட்கப்போவுது எரிஞ்சு விழுந்திருக்கும்!

அகி : அவன் ஒன்னும் நம்ம மானத்தை வாங்கல்லே — ஊரையே சிரிக்க வச்சு நம்மானத்தைப் பட்டமா பறக்க விடுறவா...நம்ம பொண்ணுதான். நிலைமை தெரியாம நீங்களும் நானும் அவனைக் குறை சொல்லிட்டிருக்கோம்.

தி : அந்த ஓடுகாலிக்கு நம்ம ராஜத்தைக் கட்டி வைக்கணும் இல்லேனு, மானம் காற்றிலே பறக்கும்—கடல்லே மிதக்கும்னு சொல்லிவச்சானு! அவன் சொன்னு அதை நம்பி எங்கிட்ட நீ சொல்ல—உனக்கென்ன புத்தியாயில்லே, இந்தடி கண்டிப்பாச் சொல்றேன். தலை போனுலும் உன் தம்பிக்கு ராஜத்தைத் தரமாட்டேன்.

அகி : நம்ம தந்தாலும்—அவன் கட்டிக்க வேணுங்களே! உறவு அறுந்துடக் கூடாதுன்னு நாயா அலைஞ்சானு நம்ம வீட்டுக்கு. கழுத்தைப் பிடிச்சு தள்ளினோம்...இப்ப அவன் காலைப் பிடிச்சாலும் ராஜத்தைக் கட்டிக்க மாட்டானுங்க. அந்த நிலைமையை உண்டாக்கிட்டா நம்ம பொண்ணு. அவன் எவ்வளவோ நல்லவன்!

(கண்ணைத் துடைத்துக் கொள்கிருள் சேலைத் தலைப்பால்)

தி : கடல்லே தண்ணீரே யில்லாமே வரண்டுபோனுலும் ஒங்க கண்களிலே எப்பவுமே வரளாது போலயிருக்கு. இப்ப ஏண்டி அழறே...ராஜம் அப்படி என்ன செய்தா! விஷயத்தைச் சொல்லிட்டாவது அழுது ஒப்பாரிவை!

[திகம்பரரின் காதோடு...புத்தகத்துக்குள்ளே மூர்த்தியிடமிருந்து ராஜத்துக்குக் கடிதத் தூதுவந்ததையும், அந்தக் கடிதம் பலவேசத்திடம் சிக்கிவிட்ட விபரத்தையும் ரகசியமாகக் கூறுகிருள் அகிலாண்டம். திகம்பரரின் கம்பீரமான முகத்திலே வேதனைக் கோடுகள் படர்ந்தன. பக்கத்திலிருந்த பத்திரிகையை எடுத்து முகத்தை மறைத்துப் பிடித்துக்கொண்டே...]

தி : ராஜம் எங்கே...மாடியில்தானே அவளை நீ எதுவும் கேட்டுத் தொந்தரவு செய்யாதே—நான் போய் அவள் உணரும்படி பேசுகிறேன்.

(பத்திரிகையும் கையுமாக மாடிப் படிகளில் ஏறுகிருர். அகிலாண்டமோ அழுதகண்ணேடு அசைவற்று நிற்கிருள்.)

காட்சி 5:

இடம் ! மாளிகை மாடி

நிலைமை : [திகம்பரர் அறைக்குள்ளே நுழைகிருர். கட்டிலில் படுத்திருந்த ராஜம் எழுந்து உட்காருகிருள். கையில் பிடிதிருந்த புத்தகத்திலிருந்து கீழே நழுவி விழுகிறது புகைப்படம். ராஜம் குனிந்து எடுப்பதற்கும் முன்னதாக திகம்பரர் நெருங்கிச் சென்று படத்தை எடுத்துக் கொள்கிருர். பார்வையை படத்தில் பதித்துக் கொண்டே...]

தி : அம்மா, ராஜம்! உன்னிடம் எதைக்கேட்டுத் தெளிவாக்கிக் கொள்ள வந்தேனே அதையே விளக்கி வைத்து விட்டது இந்தப் படம். இந்தப் படம் உன் உள்ளத்திலே நீ மூடிபோட்டு மறைத்து வைத்திருக்கும் ரகசியத்தை அம்பலமாக்கிவிட்டது எனக்கு! மூர்த்தி எழுதிய கடிதமோ அகிலாண்டத்திற்கும் பலவேசத்துக்கும் உங்களின் நிலையை விளக்கி வைத்துவிட்டது. ராஜம்

ராஜம் : அப்பா...நான்...

தி ; நீ என்ன சொல்லப் போகிருய் என்பது எனக்குத் தெரியாததல்ல ராஜம். திருமணம் உனக்குத்தானேயம்மா. உன்னுடைய அனுமதியையோ விருப்பத்தையோ கேட்காமலா நான் மணவேட்டையாடக் கிளம்புவேன். என்னைத்தான் நன்ருகப் புரிந்திருக்கிருயே ராஜம். இந்த நிலையிலே...

ரா : மூர்த்திக்கும்—எனக்கும்...

தி : சின்ன வயதிலிருந்தே —அன்புண்டு — இப்போது — காதலிக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியாததல்ல. ஆனுலும் உங்களின் காதலுக்கு வரம்பு வேண்டுமேயம்மா. உனக்கு வந்த காதல் கடிதம் இப்போது மாற்ருனிடம்—நமது குடும்ப வைரியிடம். பரம்பரை கௌரவம் ஒரு ஊதாரியின் பிடியிலே சிக்கிக்கிடக்கிறது இப்போது. ஏனம்மா இந்த நிலையை உண்டாக்கி வைத்தாய். பலவேசம்—எதையும் செய்யத் தயங்காத கொடியவன். அவனுக்கு ரகசியந் தெரிந்தால் ஊருக்கே தெரிந்த மாதிரிதான்.

ரா : புயலும் இடியோசையும் என்னைச் சித்திரவதை செய்யப்போகிறது என நினைத்தேன். ஆனுல் அப்பா... அமைதியே உருவெடுத்து ஓடிவந்த உங்களின் அன்புப் பேச்சு என் தவறை உணர வைத்துவிட்டதப்பா. என் காதல் பூஞ்சோலைக்கு வேலிபோட வரம்பு கட்ட மறந்துதான் போய்விட்டேன். இந்தச் சிறு தவறு...

தி : பெருந்தீயை வளர்த்தாலும் வளர்த்துவிடும். கதவில்லாத வீட்டிலே கள்ளர் பயம் இருக்கத்தானே செய்யும். பெண்ணின் வாழ்வுக்குக் கட்டுப்பாட்டுக் கதவுகள் வேண்டுமம்மா. உனக்கோ எனக்கோ முகத்திலே அவமானக் கரி பூசப்பட்டால்... எந்தக் காலத்தாலும் அதை அழித்துவிட முடியாதே. திருமணம் நடந்தால் உன்னைவிட நான் அதிகமாகவே மகிழ்வேன். ஆனுல் காலச் சூழ்நிலையின் காரணமாக திருமணம் தடைபட்டால்...

ரா : அப்பா! அப்படிச் சொல்லாதீர்களப்பா மூர்த்தியின் எண்ணங்களை யாருமே அசைத்துவிட முடியாது. கொள்கைக் குமரர் அவர்!

தி. : கொள்கையிலே வயோதிகம் வளரும் போது எண்ணங்கள் தளர்ச்சியடையத்தான் செய்யும். அப்போதைய நிலைமைகளை இப்போதே எடை போட்டுப் பார்த்துக் கொள்வது நல்லதுதானே ராஜம், காதலைப் பற்றிய மதிப்புரை ஒவ்வொருவர் வாழ்விலும் எப்படியெப்படியோ அமைந்து விடுகிறது. காலத்தின் வாள் வீச்சுக்கு எப்போதுமே நாம் ஆளாகி விடக்கூடாது. எனவேதான் ராஜம் நான் அழுத்தமாகவே கூறுகிறேன்....மூர்த்தி உனக்குத்தான்—நீ மூர்த்திக்குத் தானென்ருலும் திருமண நாள் வரை உங்கள் நட்பு ஊராருக்குத் தெரியாதபடி நடந்து கொள்ளுங்கள்,

தந்தையின் கருத்தைத் தலையசைத்து ஒத்துக் கொள்ளுகிருள் ராஜம். மூர்த்தியின் புகைப் படத்தை அவளிடமே திருப்பித் தருகிருர் திகம்பரர். வெட்கம் தாக்க—படத்தை வாங்கிக் கொள்ளுகிருள்)

காட்சி. : 6

இடம்....கோயிலின் பின்புறம்.

நிலைமை : [வீரனும்—பலவேசமும் பாராங்கல்லின் மீது அமர்ந்திருக்கிருர்கள். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே எழுந்து உலவத் துவங்குகிருன் பலவேசம்.]

பலவேசம் : விடமாட்டேன்வீரா! லேசில் விடமாட்டேன்! ஆதாரம் கிடைத்து விட்டது. ஆடிப் பாடினுனே நேற்றெல்லாம்—ஆற்ருேரத்தில் அந்தப் புதுப் புருவின் சிறகுஎன் கையிலே யிருக்கிறது இப்போது! திகம்பரரின் மானம் இதோ என் சட்டைப் பையிலே தூங்கிக் கொண்டிருக்கிறது. ஊர்ப் பெரியவர் வேஷம் போட்டாயே பாரடா உன் மகளின் ஊதாரித்தனத்தை யென்று முகத்திலே அடித்துக் கேட்கப் போகிறேன்.

வீரன் : கேளு பலவேசம்—நல்லாக் கேளு...ராமருக்கு அனுமார் கிடைச்ச மாதிரி நமக்கு அந்தக் கடிதம் கிடைச்சுருக்கு. லேசுலேவிட்டுருதே ஒருஆட்டு ஆட்டிப்பிடு. மனுஷன் திமிர் இதிலே தான் அடங்கனும். ராஜத்தை உன்காலடியிலே விழ வைத்து அழவைக்கனும் —அதை நான் பார்த்து சிரிக்கனும்.

பல : ராஜம் கிடைக்கிருளா — இல்லையா என்பது கூட என் கவலையில்லை வீரா. திகம்பரரின் நெஞ்சை வேதனைக் காடாக்க வேண்டும். ஊரும் உலகமும் கைதட்டிச் சிரிப்பதைப் பார்த்து அவன் அழுதழுது ஓயவேண்டும். பணத் திமிரை அடக்குகிறேன் பார்.

வீரன் : பணத்திமிரை மட்டும் அடக்கினுல் போதாது பலவேசம். அந்தப் பணம் நம் கையிலே சிக்கவேண்டும். அதிலேதான் நம்ம லட்சியமே இருக்கிறது. ராஜத்தைப்பற்றி கவலைப்படாமல் ஒதுக்கி விடாதே. உன் கையிலே சிக்கியிருக்கும் கடிதமும், அந்தக் கன்னிப் பெண்ணும்தான் நமது போர்க் கருவிகள்—பயங்கர ஆயுதங்கள்.

பல : பெண்ணைக் கட்டிக் கொடுத்தால் பொன்னையும் கொட்டிக் கொடுக்க வேண்டுமென்று அந்தத் திமிர்பிடித்த திகம்பரர் நினைத்துவிட்டார். பணமலையும் படாடோபமும் என் முன்னே என்ன பாடுபடப்போகிறதென்பதை காணத்தான் போகிருர். அவரது ஆதிக்கத் துப்பாக்கியிலே பதுக்கப்பட்டிருக்கும் பணத்தோட்டாவின் பயங்கர ஒலியைவிட....நமது ஆயுதங்களின் ஓசை அதிர்ச்சியும்—ஆபத்தும் தரக்கூடியதுதான் அவருக்கு! சிங்கார வள்ளியோடு நாளெல்லாம் சிரித்துப்பேச தங்கப் புதையலே என்னை நாடி வரப்போகிறது.

வீ : வந்துதானே தீரவேண்டும் பலவேசம். மரத்திலே யிருக்கும் கனிக்கும் —கரத்திலே யிருக்கும் கத்திக்கும் எப்படியாவது ஒருவகையிலே உறவு ஏற்பட்டுத்தானே தீருகிறது.

பல : டேய் வீரா! நீ மூளைக்கும் வேலை கொடுக்கிருய். அடடா...அவள் கனி—நான் கத்தி...ஹா...ஹா...ஹா

(பலவேசம் பக்கத்துக் கோயிலிருந்து கிளம்பிய மணியோசையும் அடக்கிக்காட்டும் பலமான குரலிலே சிரிப்பை முழக்கிக் கொண்டே வீரனை கரத்தோடு கரம் சேர்த்து அழைத்துச் சென்ருன்.)

(அடுத்த வாரம்)

தலைமைக் கழகம் : அறிக்கை—27/55

தி. மு. கழக ஆண்டு விழாவும் நாட்டுப் பிரிவினை வாரமும்

●

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங் கொண்டு, ஆறு ஆண்டுகளைக் கடந்து, ஏழாவது ஆண்டில் அடிஎடுத்து வைக்கும் பெருமைகொள் விழா 17—9—55-ஆம் நாளன்று நடைபெற விருக்கிறது.

17—9—55-ஆம் நாளிலிருந்து 23—9—55-ஆம் நாள் வரையிலுள்ள ஒருவார காலத்தைத் திராவிடநாடு பிரிவினை வாரமாகக் கொண்டு, தி. மு. கழக ஆண்டு விழாவை மிகச் சீரிய முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகச் சார்புடைய அமைப்புகளும் கொண்டாடுவனவாக!

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக் கூறியும், திராவிடநாட்டுப் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டு — தட்டிகள் எழுதி வைத்து— ஊர்வலங்கள் நடத்தி—பொதுக்கூட்டங்கள் கூட்டிக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

இயன்றுல் கொள்கை விளக்க இசையரங்குகளும்—நாடகங்களும் இலவசமாக நடத்திக் காட்டுவார்களாக!

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

மூட்டைப் பூச்சி மொழிந்த கதை!

இரவினிலே படுத்துறங்க வெண்ணி யானும்
என்படுக்கை தனையெடுத்து சுத்தஞ் செய்து
சிரமீது தலைக்கணையைச் சிறப்பாய் வைத்துச்
சிலகணங்கள் சென்றபின்னே மூட்டைப் பூச்சி
தரமாக வென்னுறக்கந் தடுத்து நின்றே
தமிழ்நாட்டி லென்னிலைசொல் தமிழா வென்று
உரமாக வென்மீது ஓட்டி யேறி
உம்குருதி எனக்கென்றே உறுஞ்சிச் சொல்லும்

இன்னாட்டிற் செல்வங்கள் எழிலா யுண்டு
இருந்திடினும் அநுபவிப்பார் யாரே யென்பாய்?
உன்னாட்டி, லுனதிரத்தம் உறுஞ்சு மென்போல்
உயர்ந்த மக்கள் பலருண்டே உன்னிப் பாராய்!
தன்னாட்டின் உயர்வுக்காய்த் தமிழகத்தே
தலைநிமிர்ந்து தகுதியுடன் உழைத்த மேலோர்
இன்னாட்டி லென்போன்ற வெத்தர் தம்மால்
இயல்பிழந்து மதிப்பிழந்து இருக்கக் கண்டோம்

தூங்குபவன் துயர் மறந்து தூங்கிவிட்டால்
சொத்தினையே திருடுகின்ற திருடன் போல
ஈங்கும்தம் இரத்தமழை இழுத்து யானும்
எழிலான வுடல்பெற்று இலங்கி நின்றேன்
பாங்குள்ள தமிழாநீ யென்னைக் கொன்றால்
பண்பான வுன்குருதி சேம மன்றோ !
தீங்குள்ள மக்களெல்லாம் வாழும் நாட்டில்
திறமையுடன் நீவிழிப்ப தெந்த நாளோ ?

பதவியென்ற படுக்கையினி லேறிக் கொண்டு
பக்குவமாய் வேட்டைதனைப் பார்த்து வந்தேன் .
உதவியென வெனைநம்பி வந்தோர்க் கெல்லாம்
உள்ளிருந்தும் 'இல்லை'யெனச் சொல்லி வந்தேன்
கதவினையே அடைத்துவிட்டு உறங்கச் சென்ற
கண்ணான பாட்டாளி கடிக்கப் பட்டான்
சதமெனவே யெனைநம்பி வந்தோர் தம்மைச்
சப்பியே குருதியினை உறுஞ்சிக் கொண்டேன்

இந்தவிதம் எனைநம்பி வந்த பேர்கள்
இளைத்திளைத்தே உடம்பெல்லாம் எலும்பாய் போனார்
சுந்ததமும் என்னிடத்தே வந்த மக்கள்
சால்புடைய உள்ளமென்றே சாற்றிட்டாலும்
நொந்ததுதான் ஒருநாளு மில்லை யன்றோ!
நோயென்றால் நசுக்குவதைப் பொறுக்க மாட்டேன்
வந்தவர்கள் எனைத்தனியே விட்டுச் சென்றால்
வாழ்க்கைதான் எந்தனுக்கு வரண்டு போகும்.

காரிலுள்ள மெத்தையினில் ஏறிக் கொண்டு
கருத்தாகச் சிலபேரை யழைத்துக் கொண்டு
பாரிலுள்ள பலவூருஞ் சுற்ற லுண்டு
பண்புள்ளா ராயிடினும் பார்க்க மாட்டேன்
போரென்றால் மூலையினில் பதுங்கிக் கொள்வேன்
புண்ணியந்தான் பிறர்க்காகச் செய்த துண்டோ?
ஊரிலுள்ள எவரேனும் உறுஞ்சப்பட்டார்:
உறவினரோ உதவியினால் உயரப் பட்டார்.

என்னிருப்பை யுணராது படுத்து விட்டால்
இப்பொழுது சமயமென்று கடிக்கச் செய்வேன்
உன் வீட்டில் குடியிருந்தே உனக்குத் துன்பம்
உணர்த்திடவே செய்தாலும் உணர வில்லை
தென்னாட்டில் மட்டிலுமே திகழ வில்லை
திறமையுள்ள வுலகமெங்கும் திகழ்கின் றேன்யான்
இன்னாட்டி லல்லாது இங்கிலாந்தில்
எழிலான அமெரிக்க தனிலும் வாழ்வேன்

கண்ணான தலைவரெலாங் கருத்தி லுன்னிக்
காலமெல்லா மென்னிலமை கழற்றிட் டாலும்
அண்ணாந்தும் அவர்சொல்லை யறிந்தே னில்லை
அவர்கத்திப் பயனுண்டோ? அறிந்து கொள்வீர்!
எண்ணாத ஏழைமக்கள் இருந்து விட்டால்
என்னிலமை எப்பொழுதும் இப்பந் தானே!
மண்ணினிலே அவர்விழிக்கும் நாள்தான் எந்தன்
மகிழ்ச்சியது குறைகின்ற நாளே யாகும்.

ஏழையென்று லின்னாட்டி லெதுவுஞ் செய்வேன்
எதிர்த்திடவே மக்கள்தான் இல்லை யன்றோ?
கோழைகளாய் இன்னாட்டு மக்க ளெல்லாம்
கூறுகின்ற அறிஞர் சொல்கூர்ந்து காணார்
பேழையினில் முடக்கின்ற செல்வம் போலப்
பெருமையாய்க் குருதிதனைச் சேர்த்து வாழ்வேன்
வாழையதின் சிங்கந்தான் வளர்வதைப்போல்
வையகத்தில் அழியாது வளரக் காண்பீர்!

எந்தனுக்கு இந்நாட்டில் வரியே இல்லை
ஏழைகட்கே அவ்வரியைப் போடச் செய்தேன்
நொந்ததன்றி யவருள்ளம் எதிர்த்த தில்லை
நுட்பறிவு இக்கால மக்கட் கில்லை
வந்ததுதான் வரியென்று வருந்த வேண்டாம்
வருகுதிப்போ இலவசமாம் கல்விப் பேரில்
சிந்தையினிற் சிறந்தவெண்ணம்; ஆயின் இன்று
செய் சட்டம் ஏழைகட்கே எனக்குஇல்லை.

இத்தனையும் என்செயலென் றெண்ண வேண்டாம்
இன்னாட்டி லிலங்குகின்ற மக்க ளுள்ளே
சொத்தினையே சுரண்டுகின்ற வெத்தர் கூட்டம்
சொல்லியபல் பாக்களுக்கும் பொருத்தமாவர்
அத்தனையும் உணருகின்ற ஏழை மக்கள்
அவனியிலே தோன்றுகின்ற நாள்தான் என்றும்
ஒத்ததொரு பொதுவுடமை ஓங்கும் நாளாம்
உயரிய அந்நாள்காண ஒன்று சேர்வீர் !

உணர்ச்சியின்றி உறங்குவரை யெழுப்ப யானும்
உயர்ந்தநல் லூசியெல்லாம் போட்டுப் பார்த்தேன்
கணப்பொழுதும் அவர்விழிக்கக் கண்டே னில்லை
கடித்ததினால் தடித்ததின்றிக் கருத்தோ வில்லை
பணக்காரர் தனைக்கடித்த யானும் மேலும்
பாட்டாளி பகுத்தறிவான் தனைக் கடித்தேன்
குணமுடையார் எழுந்தென்றன் குற்றஞ் சொன்னார்
குறைபோக்க நினைத்துவிட்டேன் கோபம் வேண்டாம்.

எண்ணத்தை இன்று முதல் மாற்றிக் கொண்டேன்
என்பொருளை இரத்தமென்றே செல்வந் தன்னை
திண்ணமதாய் திக்கற்ற ஏழைக்கட்குத்
தேயதின் சமவாழ்வு திகழ வேண்டி
கண்ணியமா யளித்திடவே கருதி விட்டேன்
சுற்றறிந்தோர் கழறுகின்ற கருத்தைக் கேட்டுப்
புண்ணியமாஞ் செயல்யாவும் பொறுப்பினோடு
பூவுலகில் புரிவதற்காம் புத்தி பெற்றேன்.

கற்றறிந்தோ ரின்னாட்டை யாண்டா ரென்றால்
கருத்துள்ள சட்டமதால் திருத்தல் கூடும்
வெற்றியுடன் விதியாகும் சட்டந் தன்னை
விதித்து விட்டால் யான்வீம்பு பேசல் உண்டோ?
உற்றதொரு கருத்தைநான் உவந்து சொல்வேன்
உன்னாட்டி லேழை யென்ற நிலையை நீக்க
ஒற்றுமையை யுள்ளத்தில் உரமாய்க் கொண்டு
ஒவ்வாத பகை நீக்கி உறுதி கொள்க!

—புலவர் சி. உண்மை ஒளியான்

முதல் முகலாயப் பேரரசி: சரித்திரச் சித்திரம்

சுல்தாணு ரசியா!

கௌதமன்

2

அந்தப்புரம் ஆசியலில், ஈடுபடுவதா என்ற எண்ணம், ரஸியாவின் கொலுமண்டப நுழைவைத் தடுத்து விட்டது! அந்த எண்ணங்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் திகழ்ந்தவர்கள்தான், அந்தக் கொலுமண்டபத்தின் ஏகபோக மிராசுக்காரர்கள்! பிரபுக்களும் — ஒம்ராக்களுமாக—நிரம்பி வழிந்த அவர்கள் ரஸியாவை ஏற்க மறுத்தனர், பெண் என்பதற்காக!! அவளால் தாமாளப்படுவது 'இழுக்கு' என்ற எண்ணத்தை அவர்கள் மீண்டும் புதுப்பித்துக் கொண்டனர்!! ஆல்டாமிஷுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு விட்டனர்!

'அன்பு மன்னனுக்கு அழகுமகளொருத்தி யிருந்தால், அந்த ஆரணங்கை, அந்தப்புரத்தின் சொர்ணப் பதுமையாக்கி, அழகு பார்த்து மகிழவேண்டுமேதவிர, கொலுமண்டபத்திலிருத்தி வாளும், கோலுமேந்தி, அவளை ஆட்சி புரியச் செய்ய எண்ணுவது, பேதமையினும் பேதமை!—அதை ஏற்று அந்த எண்ணத்திற்குத் தாங்களும் பலியாவது இஸ்லாத்தின் பெருமையையே பலியிடுவதாகும்!' என்று புதியதோர் மார்க்கத் திரை யொன்றையும் தயாரித்து இஸ்லாமிய மக்களின் கண்களையே மறைத்து விட்டனர் ஒம்ராக்கள்! அதன் விளைவாகத்தான், அரியணைக்கு வெளியில் வந்து நின்ருள் ரஸியா! அவளுக்குப் பதில் பொம்மையரச னொருவன், அந்த இடத்தையும் நிரப்பினன்!

ருக்னுதீன் என்று பெயர் அந்த பொம்மை யரசனுக்கு! ருக்னுதீன், இளவரசி ரஸியாவைவிட, அவளின் சகோதரர்களைவிட பட்டத்துக்கு அவ்வளவ நேர்மையான வாரிசுடையவனல்ல! அவன் தாய் ஓர் துருக்கிய மாது!—அடிமை!—ஆல்டாமிஷின் அந்தப்புரப் பதுமையாய் மட்டுமே இருந்தவள்! அவள் மகன் இவன்!—பட்டத்து வாரிசுக்கு வெகுதூரத்திற்கப்பாலிருந்தவன்! ஆனாலும் இவன்மீதுதான் அந்த மத பாதுகாவலர்களுக்கு 'திடீர் மோகம்' பிறந்து விட்டது! கூவி யழைத்தனர் பட்டாபிஷேகம் செய்ய!

இளவரசி ரஸியாவின் கண்கள் குளமாக, அந்த இளம் வாலிபன் பட்டம் சூட்டப்பட்டான்! ஆம்! பட்டந்தான் சூட்டப்பட்டானே தவிர, எதற்காக என்பதை இருசாராருமே உணரவில்லை! மதபாதுகாவலர்கள் இறுதியில் ஒரு முழுமுடனைத் தேர்ந்தெடுத்த குற்றத்திற்குத்தான் ஆளானுர்களே தவிர, தாங்கள் நினைத்தபடி எதையும் செய்ய முடியவில்லை! அவர்களின் இன்பக்கனவுகள் வானவெளிக் கோட்டைகளாயின. அவர்களால் எதையுமே செய்ய முடியவில்லை! அவன் தாய் திரை மறைவில் நின்ருள்!

அந்தத் துருக்கிய வடிவழகி, தன் மகனுக்குக் கொடுமைகள் கற்பிக்கும் ஆசானுனுள்! ஆட்சி முறையும், நாட்டின் நிலைமையும், சிதையுறுகிறதே என்பதைப்பற்றி அவள் காட்டிய சிரத்தையைவிட, அரசபீடம்பறிபோகிறதே என்பதிலே அவள் காட்டிய அக்கறை சிலபல மாதங்களுக்குள்ளாகவே ரஸியாவின் அண்ணன் தம்பிகளின் உயிருக்கே உலைவைத்துக் கொண்டிருந்தது. இதனிடையில் அவள் விரோதிகள் யாவருமே அரச ஆக்ஞையால் கொல்லப்பட்டனர். இறுதியில் ரசியாவின் மீதும் அவளின் அன்புப்(!) பார்வை விழுந்தது. ஆல்டாமிஷுக்கிருந்த ஒரே அன்பு மகள்—பட்டத்து மகிஷியாக இருந்து, ஏமாற்றப்பட்ட பெண்ணினத்தாள் — அலைத் தான் வீழ்த்த நினைத்தாள், அந்த துருக்கிய சிங்காரி!

நல்லவன் மூன்று ஆண்டுகளில் செய்து முடிப்பதை மூர்க்கன் மூன்று நாட்களில் சாதித்துக் கொள்வானும்—தன் பெயரையும் கெடுத்துக் கொண்டு. ஆனல் இந்த புண்ணியவதிக்குக்கிடைத்ததோ சிலபல மாதங்கள்தான் —இதற்குள் அந்த மகாமேதை துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனத்திலே இறங்கிவிட்டாள்! மகனை மடையனுக்கி, அவனுக்கு வாழ்வும் ஆளும் பீடமுமளித்த 'ஒம்ராக்களை'ச் சுண்டைக்காய்களாக்கி மக்களை இளித்த வாயர்களாக்கி, ஓமகுண்டத்திலே இறக்கிவிட்டாள் அந்த ரண பத்ரகாளி! நாடு காடாகியது!

இங்கோ துயரால் துவண்ட ரஸியா ஆத்திரத்தால் துடித்தெழுந்தாள். அந்தப்புரத்திலே அமைக்கப்பட்ட பலி பீடத்திலே, நாட்டின் வாரிசுக்காரர்கள் ஒவ்வொருவராக சாய்க்கப்பட்டு வருவதை அவளால் கண்டு சகித்துக் கொள்ள முடியவில்லை! தானும் தன் வாழ்வும் பறிக்கப்படும் நிலையை அடைவதற்கு முன்னமேயே எதிரிகளின், மமதைக் கண்களைப் பறிக்கும் மின்னலாகத் தான் மாறியே தீரவேண்டுமென்று துடிதுடித்தாள் ரஸியா! அந்த ஆடாத சொற்பாவையின் சிந்தைக்குள்ளும் மனக்கண்ணுக்கு முன்னும் நாட்டின் அழிவு வேலைகள் ஒவ்வொன்ருகத் தோன்றி, தோன்றி மறைந்து கொண்டேயிருந்தன! ஆட்சிப் பீடத்தையும் பறித்து, ஆளும் நினைப்பையும் அழித்து தன்னையோர் மாளிகைக் கிளியாக்கிவிட்டார்களே இந்த 'ஒம்ராககள்' என்று உள்ளம் வெதும்பினுள் ரஸியா!

துகில் மறைத்த உடலகம், இன்ப நெகிழ்ச்சிகளால் துள்ளியெழ, மாசற்ற முகத்தினிலே புன்னகை அரும்ப, வளைவுப் புருவங்களால் சிறையிடப்பட்ட மான் விழிகளிலே ஒளியும் வாஞ்சையும் பீறிட்டெழ, தேன்சுவை அதரங்களிலே உணர்ச்சி அலைகள் மோதிமோதி யெழ, தழதழத்த குரலிலே அன்பு மொழிகள் ஒவ்வொன்ருக வெளிவர, விரித்த இரு கரங்களின் அணைப்பிற்குள்ளே தனதுடலையே புதைத்து வைத்துக் கொண்டு வானவீதியின் அழகு வண்ணம் காணும் ரசிகர்களாய் — தென்றலின் இனிமை பருகும் புதுமணத் தம்பதிகளாய்—தானும் தன் தலைவனுமாக இருக்க வேண்டிய பருவத்தையுடைய ரஸியா தனியொருவளாய், மாளிகையின்மேல் தளத்திலே நின்று கண்ணீர் உகுத்தாள்! காதல் சிறப்புக்களால் பூரிக்கப்பட வேண்டிய அவள் நெஞ்சம் இறப்பின் வரவை எதிர்நோக்கிக் கொண்டேயிருந்தது.

அண்ணன் கொல்வானே...! அன்னையின் ஏவலர்கள் கொல்ல வருவாரோ என்றெல்லாம் எண்ணியே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலைமை அவளுக்கு! சோகத்தின் முழுஉருவாய் துன்பக் கேணியில் மிதந்து கொண்டிருந்த அந்தப் பெண் மயிலுக்கு நிம்மதியே இல்லாத ஓர் சூழ்நிலை!

வானத்தை அண்ணுந்து பார்ப்பாள்—அதன் நீலவண்ணம் அவள் உள்ளத்தை கொள்ளை கொள்ளும்! கண்சிமிட்டும் தாரைகைகள், அவளை வா வா என்றழைக்கும்! யானைதந்தப்பிறைநிலாவோ—அவள்தன், அன்னை தந்த பீதி போக்கும், தன்னொளியாகி இன்முகம் காட்டி நிற்கும். இதன் மத்தியிலே விண்ணுயர் கோபுரமொன்று இந்த இன்பக் காட்சிகளுக்குப் பின்னணியாக நின்று அவள்தன் அன்புத் தந்தையாம் ஆல்டாமிஷை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். விம்மி விம்மி அழுவாள் ரஸியா!

'வானத்தைத் தொடும் அழகுக்கோபுரமே! உன்னைக் 'குதப்மினுர்' என்றழைத்தார் எம் அன்புத் தலைவர், என் தந்தையோ உன்னை எழிலுறக் கட்டி முடித்தார்! ஒளிவிடும் சலவைக் கல்லும் செந்நிறப் பளிங்குக் கல்லும் ஒருசேர நின்றிழைத்த, பொலிவுறும் வான விளிம்பாக அவர் உன்னைக் கட்டிமுடிக்க பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமென்று நினைக்கின்ருய்! 250 அடி உயரம்!—எவ்வளவு அரும்பாடு தெரியுமா! நானனுபவித்திருக்கிறேன், அந்த சுக துக்கங்களை, நீ வளர்ந்த விதம்பற்றி அவர் என்னிடம் கூறிட்டபோது! ஒரு சாதாரண கோபுரம்—மனித சாதனைக்குட்பட்டது. இதனைக் கட்டி முடிக்க அவர் எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டார் தெரியுமா! ஒருவளைவு சரியாக அமையா விட்டால் அவர் உறங்கியதில்லையாம். ஒரு படிவத்தின் அமைப்பு நிலை தவறிவிட்டால் அவர் உண்டதில்லையாம்! மன நிம்மதியும் கொண்டதில்லையாம்! அவ்வளவு ஆர்வங் குன்றுமல் கட்டிமுடித்தாராம் உன்னை! நீயோ இன்று 'இஸ்லாத்தின்' பெருமிதத்தைப் போன்று உயர்ந்தோங்கி நிற்கின்ருய்! உன்னைக் காணுகின்ற போதெல்லாம், எனதன்புத் தந்தையைக் காணுகின்றதைப் போன்ற நினைப்பு! எனதருமைத் தந்தை மட்டுமின்று உயிரு நிருந்தால் நானடையும் இந்தக் கொடிய வேதனையைக் கண்டு சகித்துக் கொண்டா யிருந்திருப்பார்! 'எங்கோ கிடந்ததுகளுக்கும்' — ஏனோதானோக்களுக்குமா இன்று அதிகாரமிருந்திருக்கும்! அவர்களா என்னையும், எனதன்பு உறவினரையும் அழிக்கக் கிளம்புவார்கள்? எப்படித் தேடி எடுத்த சாம்ராஜ்யம்—எவ்வளவு போரிட்டுப் பெற்ற பெருநிலம் — எங்கெங்கெல்லாம் ரத்தக் காடாக்கிப் பெற்ற அருமைநாடு! அது சிதையுறுகிறதே இன்று!—

நொறுங்கிப் போன வங்காளம்—வேதனையால் தவித்த பீஹார்—அடிபட்டுச் சிதைந்த மாளவம்—கலங்கிக் குமுறிய குவாலியர்—இப்படி எந்தெந்த நாட்டை யெல்லாம் துளைத்துப் பெற்ற பெரும் புகழ் தெரியுமா எனதருமைத் தந்தைக்கு! இதை யெல்லாம் இன்று எவ்வாறு வீணர்கள் தங்கள் காலடியில் போட்டு மிதிக்கிருர்கள் தெரியுமா என தருமைக் கோபுரமே. ஒரு காலத்திலே மாளவத்தின் பெருவீரனும் விக்கிரமாதித்யனது பெருஞ்சிலையும் தகர்ந்து விழ்ந்ததாம்—என் தந்தையின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள முடியாமல்! ஆனல் இன்ருே என் தந்தையின் சிலையையே கூட இந்த அகம்பாவிகள் தங்கள் காலடியில் போட்டு மிதித்தாலும், கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். நல்ல பரிசு தருகிருர்கள் என்றுதான் வேதனை யடைவேன். நானென்ன செய்ய முடியும். நான் என்ன செய்ய அதிகாரம் பெற்றவளாக விட்டார்கள் அவர்கள்!

இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செலுத்திய எனதருமைத் தந்தை—மக்களின் மனவலிமையைத் தன் துணை வலிமையாகக் கொண்டு அவர்களின் புன்முறுவலை தனது அதிகார வரம்பாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்காக டெல்லியின் எல்லைகளை வளர்த்து; எதிரிகளின் படைகளையும் துளைத்து புதியதோர் இஸ்லாமிய சாம்ராஜ்யம் கண்டார். அங்ஙனம் கண்ட அந்த இலட்சிய புவிக்குத் தனதன்பு நெறியால், ஓர் பொலிவையும் தேடித் தந்தார் என் தந்தை! மக்களும் அவராட்சியில் பொற்காலம் கண்டனர்! மத குருமார்கள் போற்றினர் அவர் ஆளும் முறையை. ஒம்ராக்களோ—பதிகம் பாடினர், பிரபுக்களோ வேஷமிட்டனர். சிறு சிறு மன்னர்களோ—தலை வணங்கினர். மந்திரிப் பிரதானியரோ சதா தூபமிட்டுக் கொண்டிருந்தனர். ஆனல் எனதருமை கோபுரமே அத்தகைய மகானுபாவர்கள்தான் இன்று 'திமிர்' மோகம் கொண்டலைகின்ருர்கள்! அதிகார போதையால் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு வருகின்ருர்கள் களத்தை நோக்கி!

இஸ்லாம்புகழ் குன்றிவிடும்—போடுகிருர் இப்படி யொருவர் திடீர்கூச்சல்!

ஒரு பெண்மணி ஆளுவதைப் பேயும் பொறுக்காது—இப்படியொரு பேயனுபவசாலி கொக்கரித்து நிற்கின்ருர்.

ஆண்களிருக்க ஒரு பெண் வாரிசா...! அடாது! அடாது!! இப்படிச் சிலர் சமயத்தைப் பின் பற்றுகிருர்கள். ஆனல் என் தாயோ—அவள்தான் — அந்தத் துருக்கிய ஒளி (!) விளக்குதான்—என்னை வேரறுந்த மரமாக கிழேதள்ளி மாய்க்கச் சதியும் செய்து வருகிருள், அஞ்சவில்லை!—அயரவில்லை!—அவளந்த முயற்சியில்! 'இந்நிலையில் நான் வாழுவதுதான் ஏனே எனதருமை நினைவுச் சின்னமே! நீ உயர்ந்தோங்கி வளர்ந்திருக்கிருய் 250 அடி!—உன்னைப் பார்க்கப் பார்க்க பரவசமடைகின்றேன்நான்! ஆனல் உன்னைப்போலவே—ஏன் உன் உயரத்துக்கும் மேலாகவே, எம்மைச் சூழ்ந்திருக்கும் மகானுபாவர்களுக்கும் தங்கள் கோணல் புத்தியும் மமதைச் செறுக்கும் வளர்ந்திருக்கிறது. இதை எவர்தான் தாங்கிக் கொள்வர் என தருமைக் கோபுரமே சொல்வதொன்று—செய்வதொன்று...! வாக்களிப்பது ஒன்று—வரம்பு மீறிப்போவது மற்றொன்று...! அரசியல் மாளிகையை சந்தைக் கடையாக்கி வாணிபம் நடத்த முற்படுகின்றனரே இந்த அதிகார வெறியர்கள்...? ஆகுமா இது! நேர்மையான வாரிசுக்காரர்களெல்லாம் நீக்கப்படுவதோடு நில்லாமல் — ஒதுக்கப்படுவதோடு நில்லாமல் — கொல்லவும் படுவதென்ருல் நாட்டு மக்களுக்கெல்லாம் ஞானமில்லை யென்று பொருள்! கேட்க எவரும் முன்வரார் என்று அர்த்தம்; நாதியற்ற பெருமண்டலமா இந்த இஸ்லாமிய புகழ் மண்டலம்!

கண்ணைக் கவரும் மசூதிகளும், கருத்தைக் கவரும் சமயக் கொள்கைகளும் காலவிரயம் செய்யாத இஸ்லாமிய பெருமக்களும், மகிழ்வைத் தரும் அவர்களின் நடையுடை பாவனைகளுமிருந்தும், இவ்வநியாயம் நடக்கிறதென்ருல்—நடந்து முடிகிறது என்ருல்—நடக்க விடுகிருர்களென்ருல், நாட்டின் நடைமுறையின் அடிப்படையே ஆட்டங் கண்ட ஒன்ருக இருக்கிறது என்று தானே எண்ணவேண்டி யிருக்கிறது.

தன்னொளி படரும் நினைவுச் சின்னமே! இந்தச் சூழ்நிலையிலே எத்தனை நாள் வாடுவது? நெருப்பை நெஞ்சிலே பரப்பி வைத்துக் கொண்டு, சுடாதி என்று வாளா யிருப்பவருண்டா! கொடிய கூர்வாட்களை பல திக்குகளிலேயிருந்தும் பாய்ச்சக் காத்திருக்கும் கைதேர்ந்த அதிகார வெறியர்களின் கருணையற்ற சதிச்செயல் நிறைவேறு முன்பே உள்நாட்டுக் குழப்பமும், பகை யரசனின் தாக்குதலும் பணிந்து போனவர்களின் திடீர் புரட்சியும் நாட்டிலே தோன்றி எழாததற்கு முன்பே இதற்கோர் முடிவு கண்டாக வேண்டியது அவசியத்திலும் அவசியமல்லவா! வாட்டியது போதும்! பணிந்ததும் பயந்ததும் போதும்! உன்னிடம் இரவு நேரங்களில் முறையிட்டு; முறையிட்டு என் கண்களை வற்ருத அருவியாக்கிக் கொண்டது போதும்! வழிந்தோடும் கண்ணீரும் இனித் தொடர்ந்து வரமுடியாது — வற்றிவிட்ட காரணத்தால்! நெளிவதில் பயனில்லை! இரண்டிலொன்று—பார்த்தேயாக வேண்டும். இஸ்லாத்தின் முன்பு மதியற்ற மன்ன

8-ம் பக்கம்

திராவிடன்

சென்னை : 2—9—55 : வெள்ளி

பந்த் பண்டிதரின் கொக்கரிப்பு!

●

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு மாநிலமும், மொழி, இன—கலாச்சார அடிப்படையில் தனிஉரிமை பெற்றும் முக்கிய பிரச்சினைகளில் இம்மாநிலங்கள் அனைத்தும் நேசப்பான்மையில் (ஏற்றத்தாழ் வில்லாது) இயங்கி வருதல் வேண்டும் என்ற நேர்மையான கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் கூறும்போதெல்லாம், ஓரளவு தீவிரமான முயற்சியில் ஈடுபடும் போதெல்லாம், அனைத்திந்தியா என்ற பேரால் இன்று தர்பார் நடத்திவரும் கனம்கள் விளக்கெண்ணெய் சாப்பிட்டவர்களைப்போல முகத்தைச் சுளித்துக் கொண்டு "ஒற்றுமை—ஒற்றுமை" இதை யாரும் சீர்குலையச் செய்யாதீர்கள்—அப்படிச் செய்வது மாபெருந் துரோகம், அதனால் நமது சுதந்திரமே நாசமாகிவிடும்" என்றெல்லாம் கூப்பாடு போட்டு பிற மாநில மக்களின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் வித்தையில் தங்களின் கைவரிசையைக் காட்டுகின்றனர்.

இவ்வித கனம்களில் நேரு பண்டிதருக்கு அடுத்தபடியானவர் என்று கருதப்பட்டுவரும் இந்தியப் பேரரசின் உள்நாட்டு அமைச்சர் பந்த் அவர்கள் அண்மையில் ஐதராபாத் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் :

"மத்திய ஆட்சியை டலவீனப்படுத்துகிற சக்திகள், இயக்கங்கள் இந்த நாட்டில் இடம் பெற்றிருக்கின்றன.

வகுப்புவாதம், சாதிவெறி, மொழிவெறி, வடநாடு—தென்னாடு என்று வேறுபடுத்திப் பேசுவது. தேசீய மொழியான இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வது முதலியன அந்த ஆபத்தான சக்திகளாக விளங்குகின்றன' இந்த ஆபத்தான சக்திகளை ஒழிக்க மக்கள் ஒன்றுபட வேண்டும்.

தென்னாட்டிற்கும் — வடநாட்டிற்கும் எந்த வகையிலும் வேறுபாடு இருப்பதாகக் கூறுவதற்கு நியாயமே இல்லை.

ஏதாவது ஒரு வேலையைத் துவக்க வேண்டுமானால் அதனை நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் துவக்கித்தானாக வேண்டும். ஏதேனும் ஒரு ஆக்க வேலை, வடநாட்டில் துவக்கப்பட்டால், அதனாலேயே தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்பது பொருளல்ல, அதேபோல தென்னாட்டில் துவக்கப்பட்டால் வடநாடு புறக்கணிக்கப்பட்ட தாகாது.

ஐதராபாத்தில் ஒரு ,ராஷ்டிரபதி நிலையம், ஏற்படுத்தியிருப்பது தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்—உதாரணமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்!

இந்திய உள்நாட்டு அமைச்சர் தோழர் பந்த் அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கோறும் நமது கழகத்தை மனதில் வைத்தே இவ்வாறு கொக்கரித்திருக்கிறார் என்று தெரிகிறது.

தென்னாட்டவர்கள் தங்களின் நியாயமான உரிமையைக் கேட்பதும், அதற்கான முயற்சிகளில் அதுவும் அமைதியாக ஈடுபடுவதும் அனைத்திந்திய ஆதிக்க வர்க்கத்தினருக்கு தேசத் துரோகச் செயலாகப் புலப்படுகிறதென்றால் அதற்கு தென்னாட்டவர்களாகிய நாமோ அல்லது நமது இயக்கமோ குற்றவாளிகள் என்று நம்மீது ஆத்திரப்படுவார்களானால் ஒன்று டெல்லிஆதிக்கத்தாரின் கண்களில் ஏகாதிபத்ய மாசு படிந்திருக்க வேண்டும் அல்லது தென்னாட்டு மக்களின் மனக்குமுறலை தெரிந்து கொள்ள அந்த ஆதிக்கபீடத்தில்அமர்ந்திருப்போரிடம் மனவளமும், மனிதாபிமானமும் இன்னும் இடம் பெறாதிருக்க வேண்டும் என்றே ஐயுற வேண்டியிருக்கிறது,

தென்னாட்டின் நிலப்பரப்பிலிருந்து மற்ற எல்லாத் துறைகளிலும் மிகச் சிறிய அளவிலுள்ள நாடுகளெல்லாம் இன்று உலக அரங்கிலே சுதந்திர நடைபோடுகின்றன. ஆனால் தென்னாட்டவர்களுக்கு மட்டும் அந்தச் சுதந்திரதாகம் ஏற்படக் கூடாதாம்! அப்படி ஏற்பட்டால் அது மகாமகா தேசத்துரோகமான செயலாகுமாம்.

இந்தப் பல்லவியை பண்டித பந்த் அவர்களைவிட மிகச்சிறந்த முறையில் நேரு பண்டிதரே பாடிப் பார்த்தார்; அனைத்தும் 'அபஸ்வரம்' என்று தெரிந்ததால், உலக நாடுகளிடையே சமாதானத்தை நிலைபெறச் செய்யும் "அவசர" வேலையில் ஈடுபட்டிருக்கிறார்!

ஆதலால் நேரு பண்டிதர் விட்ட வேலையை பந்த் பண்டிதர் தொடங்கி யிருக்கிறார் போலும். ஒருக்கால் இவரும் வடநாடு—தென்னாடு என்று மனதில் கருதுவதுகூட சிறுபிள்ளைத்தனம்—முட்டாள்தனம் (Fantastic Nonsense) என்ற பல்லவியை ஸ்வரம் போட்டு பாடும் அளவுக்கு பயிற்சி பெறக் கூடும்!

எனினும் இவ்வித உருட்டல், மிரட்டல், பசப்பு வார்த்தைகள் ஆகியவைகளினால் தென்னாட்டு மக்களின் உரிமையைப் பறித்து விடலாம் என்று கருதப்படுமானால் அதைவிட விவேகமற்ற போக்கு வேறெதுவும் இருக்க ,முடியாது என்பதை பந்த் பண்டிதர்கள் உணர வேண்டுகிறோம்.

தென்னாடும்—வடநாடும் என்றென்றும் நேசப்பான்மையுடன் இயங்குதல் வேண்டும் என்பதற்காகவேதான் தனிஉரிமை கேட்கப்படுகிற தென்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங்களை, புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி யிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். எனவே இதனை புரிந்து கொண்டிருக்கும் பந்த் பண்டிதர்கள் பொருத்தமற்ற பேச்சுகளில் தங்களின் நேரத்தை வீணாக்குவதினால்தான் வடநாடு—தென்னாடு என்ற பேதாபேதம் என்றென்றும் நீடித்திருக்கச் செய்யும் நிலை ஏற்படலாம்.

வகுப்பு வெறியர்கள் யார்? மொழித் துறையில் ஆதிக்கம் செலுத்தி வருவது யார்? இந்தியத் துணைக்கண்டத்தில் ஒருபகுதி மக்களின் அறிவாற்றல் உள்பட அப்பகுதியின் இயற்கை வளப்பத்தையும் பொருளாதாரத்தையும் தேசியத்தின் பேரால் சுரண்டுவது யார் என்பதை யெல்லாம் நாம் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதைவிட பொறுப்பைச் சுமந்துள்ள பந்த் பண்டிதர்கள் சற்று நிதான புத்தியுடன் சிந்தித்தால் உண்மையை உணர்வர்.

"தென்னாடு—புறக்கணிக்கப்படவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக ஐதராபாத்தில் ஒரு ராஷ்டிரபதி நிலையம் ஏற்படுத்தியிருப்பதே போதிய சான்றாகும்" என்று பந்த் பண்டிதர் தமது ஐதராபாத் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்! தென்னாட்டு மக்களை எவ்வளவு ஏமாந்தவர்களாக இவர் கருதி யிருந்தால் இவ்வாறு அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவதைப்போல, இனி அமைக்கயிருக்கும் ராஷ்டிரபதி மாளிகையைப்பற்றி குறிப்பிட்டிருப்பார் என்பதை அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுகிறோம்.

கஞ்சி வரதப்பா என்றாராம் ஒருவர். எங்கே வருதப்பா என்று கேட்டாராம் மற்றொருவர்! அந்த கதையைப்போல அல்லவா பந்த் பண்டிதர்கள், நமக்கு வேண்டுவது மாநில உரிமை யென்றால் ராஷ்டிரபதி மாளிகையே உங்கள் பகுதியில் பவனி வரப்போகிறதே என்கின்றனர்!

அடா அடா!—பந்த் பண்டிதரின் பேச்சில் எவ்வளவு நேர்மை சொட்டுகிறது பார்த்தீர்களா! ஏகாதிபத்ய எண்ணத்தில் மூழ்கி யிருந்தவர்களெல்லாம் இவ்வித பல்லவியைப் பாடிப்பாடி அலுத்து இறுதியில் மக்கள் சக்திக்குகே பணிந்திருக்கின்றனர்.

இந்த அறிவுரையை ஐதராபாத்தில் கொக்கரித்த பந்த் பண்டிதர்களுக்கு நாமும் பணிவன்புடன் நினைவூட்ட விரும்புகிறோம்.

வருந்துகிறோம்

★

இலங்கை தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் வி. எஸ். முருகன் அவர்களின் அருமைத் தந்தையார் 30—8—55-ம் நாள் இயற்கை யெய்தினார் என்ற தந்தி செய்தி வரப்பெற்று மிகவும் வருந்தினோம். இலங்கைவாழ் திராவிடர்களின் 'நல்வாழ்வுக்கான பணியில் தளரா உறுதியும் அதற்கான ஆற்றலும் படைத்த நண்பர் வி. எஸ். முருகன் அவர்களுக்கு நமது ஆறுதலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்க

சென்னை பி. அண்டு சி. தொழிலாளர் தோழர்களின் பெருமுயற்சி

தி மு, கழக மாநில மாநாட்டுக்கு தங்களின் உதவியையும் அளிக்க சென்னை பி. அண்டு. சி. மில் தொழிலாளர்கள் அதற்கான ஆக்க வேலைகளைச் செய்ய 44 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்துள்ளனர். இந்த அமைப்புக் கூட்டம் 28—8—55 அன்று தோழர் இளம்பரிதி முன்னிலையில் நடைபெற்றது. ஏராளமான தொழிலாளத் தோழர்கள் வந்திருந்து தங்களின் எண்ணங்களைத் தெரிவித்தனர். இந்நிதியை விரைவில் தருவதென்றும் முடிவு செய்தனர்.

குழுவினர் விவரம்

செயலாளர் ! டி. எஸ். சண்முகம் Clerk B. M. Carding

துணைச்செயலாளர் : கோ. கேசவன் C. M., Warehouse

பொருளாளர் : கோ. காசிநாதன் Clerk M. O.

நிர்வாக உறுப்பினர்கள் :

தூயமணி, மாணிக்கம், செயராமன், சங்கிரன், பாலன், வீரன், அந்தோணி பெருமாள், ஆரோக்யசாமி, மணி, கணேசன், மூர்த்தி, வெங்கடாசலம். கன்னியப்பன். பழனி, எல்லப்பன், ஜே. எஸ். மணி, வி. கே. சண்முகம், சிதம்பரநாதன், கதிர்சுப்ரமணி, சிதம்பரம், ஆ. வே. துளசிங்கம், பெருமாள், மு. பாலன் செகதீசன், பரமசிவம், மாரிமுத்து, பால்ராஜ, சின்னசாமி, க. வரதன், திருவேங்கடம், சண்முகம், தங்கவேலு, மூர்த்தி, சிவராமன், சகாதேவன், சுப்ரமணி, விசுவநாதன், ராமலிங்கம், சுப்ரமணி, வைரவன். ஆகியோர்

தோழியர் விஜயலட்சுமி பண்டிட்
முகாம் : லண்டன்

அம்மையாரே, நலம் வேண்டுகிறேன். அமெரிக்காவில் தாங்கள் இந்தியத் தூதராகயிருந்தபோது —அமெரிக்கர்கள் தங்களிடம் செய்த வம்புகளைப் பற்றி இன்று வெளியிட்டு மனவேதனைப்பட்டிருக்கிறீர்கள்!

'இந்தியத் தூதர் பதவியை ஏற்றது முதல் அதிலிருந்து விலகும்வரை என்னை அமெரிக்கர்கள் "கண்ணே கண்ணே" என்று அழைக்கத் தொடங்கிவிட்டனர். அது எனக்கு மிகவும் சங்கடமாயிருந்தது' என்றும் மனம் வெதும்பியிருக்கிறீர்-இருக்காதா ஏதோ ஒருவர் இருவர் கண்ணே என்றழைத்தால் அறியாமையால் அழைக்கின்றனர் என்று சகித்துக் கொள்ளலாம். குலைக் கல்லும் பிடாரி என்பார்களே அது போல அமெரிக்கர்கள் அனைவருமே தங்களைக் கண்ணே—கண்ணே என்றழைப்பதானால் அதை நினைப்பதற்கே மிகவும் சங்கடமாகத்தானிருக்கிறது.

இதுதான் தொலையட்டும் என்றால், தாங்கள் ஐக்கிய நாடுகள் சபைத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், ஒரு பெண் நிருபர் உங்களை அணுகி "நீங்கள் உடுத்தியிருக்கும் சேலையின் கலர் என்ன?" என்று கேட்டதாகவும் உடனே தாங்கள் அந்த நிருபர் மீது கோபப்பட்டு உரக்கக்கூச்சல் போட்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்! பரிதாபம்—பரிதாபம்!!

இத்துடனாவது இந்த படலம் முடிந்ததாயென்றால் மறுநாள் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்த போது தங்களின் தலை ரோமம் கருப்பா—வெள்ளையா, தைலம் தடவப் பட்டிருக்கிறதா—தாங்கள் சிரித்தது எப்போது? என்பதைப் பற்றியே முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருப்பதாகவும் கூறுகிறீர்கள்!

நேருபண்டிதரின் தமக்கையாரே உங்களை ஒன்று கேட்கிறேன். —உண்மையிலேயே ஐயப்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்காக —அதாவது அரசியல் துறையில் ஈடுபட்டுள்ள உங்களைப் போன்ற பெண்மணிகள் அனைவரிடமும் இப்படித்தான் அமெரிக்கர்கள் நடந்து கொள்கிறார்களா அல்லது தங்களிடம் மட்டும் இவ்வித குறும்புத்தனத்தைக் காட்டுகின்றனரா என்பது விளங்கவில்லை.

தங்களிடம் மட்டுந்தான் இவ்வித வம்புக்கு அமெரிக்கர்கள் வருகிறார்களென்றால் அந்த அநீதியை ஒழிக்கத்தான் வேண்டும்மீண்டும் நான்கு வல்லரசுப் பிரதமர்களைக் கொண்ட அவசரமாநாடு நடத்தச் சொல்லலாம். அதிலும் அவர்களுக்கு புத்தி வரவில்லையெனில் தங்களின் அலங்காரங்களில் குறைந்தபட்ச திட்டம் கையாண்டு அமெரிக்கர்களிடம் படிந்துள்ள அழுக்கைப் போக்கலாம்.

அதாவது பிறர் அறிவுபெற நம்மை நாமே வருந்திக்கொள்வது —சகிப்புத் தன்மை காட்டுவது— விட்டுக் கொடுப்பது—இவைகள் காந்திய முறைகள் என்பதையும் நீங்கள் அறிந்ததுதானே.

எனவே தாங்கள் இதற்காக ஒன்றும் அஞ்சவேண்டாம். மன வருத்தம் அடைய வேண்டாம். கத்தியின்றி ரத்தமின்றி போர்ச்சுகீசிய ஏகாதிய பத்திய வெறியை எதிர்த்து வெற்றி காணுவோம் என்று நேரு பண்டிதரின் சர்க்கார் சொல்லுகிறார்களல்லவா அதுபோன்றே தங்களைக் கண்டதும் 'கண்ணே கண்ணே' என்று கதறும் அமெரிக்கர்களின் வெறியைத் தகர்த்தெறிய தாங்களும் ஆவன செய்வீர்களாக!

ஐக்கிய நாடுகளின் சபைத் தலைவியாகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டி எழுத வேண்டுமென்றால் பத்திரிகைகளுக்கு வேறு விவரங்கள் கிடைக்கவில்லையா?

ஏன் அகில உலக விவகாரங்களில் தாங்கள் குறிப்பிடத்தக்க செயல் ஒன்றும் புரியவில்லையா? அப்படியொன்றும் இல்லை, நேரு பண்டிதரின் தமைக்கையார் என்ற பெருமைக்காகவே பெரிய பதவிகள் கொடுக்கப் பட்டதென்று அப்பத்திரிகையாளர்கள் கூறுவார்களேயானால் ஏதோ இரண்டொரு வார்த்தைகளில் தங்களைப்பற்றி குறிப்பிடுவதை விட்டு தலை ரோமம் இயற்கையான கருப்பா அல்லது... என்ற ஆராய்ச்சியில் இறங்குவதா?

இருக்கட்டும்—இருக்கட்டும் அடுத்த முறை நமது பிரதமர் நேருஜி மேலைய நாட்டிற்குச் செல்லும் போது இதைக்கண்டிக்கும் வகையில் சிறுபிள்ளைத்தனம் —முட்டாள்தனம் என்று அவர்களைக் குறிப்பிட்டு வெளுத்துக் கட்டச் சொல்லலாம்.

எனவே அம்மையாரே அஞ்சற்க.

—கூத்தரசன்

*

டாக்டர் எ. ஜி. கோமதியம்மையார்
கோயில்பட்டி

பெண்கள் கழகச்செயலாளரே வணக்கம். அண்மையில் கோயில்பட்டியில் நடைபெற்ற திருவாசக விழாவில் புராணப் பிரசங்கி கிருபானந்தவாரி என்பவர் தனது புராணப் பிரசங்கங்களில் பெண்களைப்பற்றி அடிக்கடி இழிவாகப் பேசினதாகவும் இனியாவது அவர் தனது தவறுகளிலிருந்து திருந்த வேண்டும் என்றும் இல்லாவிடில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தீர்கள்.

அம்மையாரே—புராணப் பிரசங்கிகளைக் கண்டிப்பதில் பயன் என்ன யிருக்கிறது? சட்டியில் இருப்பது தானே அகப்பையில் வரமுடியும்? அதுபோலவே ஆண்டவன்பேரால் வரையப்பட்டுள்ள கதைகள்—புராணங்கள் ஆபாசக் களஞ்சியமாகவும் குறிப்பாக தாய்க்குலத்தை அடிமைப்படுத்துவதாகவும் இருக்கும்போது அந்த 'பக்தி' வெள்ளத்தில் யார் முழுகினாலும் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாகத் தானே முடியும்.

எனவே புராணப் பிரசங்கங்களைக்கேட்டால் 'புண்ணியம்' உண்டு என்ற அறியாமையிலிருந்து விழுச்சியுற தமிழ் நாட்டுப் பெண்கள் கழகத்தினர் ஆவன செய்தால் கிருபானந்தவாரிகள் என்ன, அந்தப் புராணப் பிரசங்க கோஷ்டிகளுக்கெல்லாம் கர்த்தாக்கள் என்று கூறிக் கொள்பவர்களும் அறிவு விளக்கம் பெறுவர்

ஆகவே தமிழ் நாட்டுப் பெண்கள், மத—புராணப் பிரசங்கங்களைக் கேட்கச்செல்லும் அவல நிலையிலிருந்து விடுபடும் வகையில், நாட்டுக்கு நற்பணியாற்றிய—பெண்ணின் பெருமையை நிலைநாட்ட பெருந்தொண்டு புரிந்த—அறிஞர்கள், வீரராங்கனைகள் ஆகியோரின் வரலாறுகளை எடுத்துக் கூறும் செயல்களில் தாங்களும் தமிழ் நாட்டுப் பெண்களின் கழகமும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இதன் வாயிலாக புராணப்பிரசங்கிகளான கிருபானந்த வாரிகளுக்கு மட்டுமல்லாமல் அத்துறையில் ஈடுபட்டுள்ள சாரிகளும் அறிவு பெறுவர்.

—கூத்தரசன்

பெங்களூரில் விசித்திர அடக்குமுறை!

17—7—55 தி. மு. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு பெங்களூர் சிக்கலால் பாக்கில் வரவேற்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்காக அன்று பெங்களூர் மாவட்டச் செயலாளராக யிருந்த தோழர் எ. டி. பிரான்சிஸ் அவர்கள் 10 நாட்களுக்கு முன்னதாகவே அனுமதி கோரி போலீஸ் அதிகாரிகளுக்கு எழுதி யிருந்தார். எனினும் அத்தேதிவரை அனுமதி செயலாளரிடம் சேரவில்லை. இதற்கிடையில் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுவிட்டன. கூட்டமும் இனிது அமைதியாக நடந்தேறியது.

கூட்டம் நடைபெற்ற பின்னர் போலீஸ் அதிகாரிகள் தோழர் பிரான்சிஸ் மீது அடக்குமுறைகளை ஏவினர், வழக்கு தொடுத்தனர். நீதி மன்றமும் வழக்கை விசாரித்தது. தோழர். எ. டி. பிரான்சிஸ் விவரத்தை எடுத்துக் கூறியும் அவருக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுக்கவே இரண்டு நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தோழர் எ. டி. பிரான்சிஸ் அவர்கள் இரண்டு நாட்கள் சிறைத் தண்டனைக்கு ஆட்பட்டு 25—8—55-ம் நாள் விடுதலையடைந்தார்.

அதுசமயம் சிறைவாயிலில் பெங்களூரிலுள்ள எல்லா தி. மு. கழகக்கிளைகளும் தோழர் பிரான்சிஸ் அவர்களை வரவேற்று நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்று உபசரித்தன.

போலீஸ் அதிகாரிகளின் இந்த அடக்கு முறையைக்கண்டு நகர மக்கள் பெரிதும் வியப்படைந்திருப்பதாகவும், அதே சமயத்தில் கழகத் தோழர்களின் உறுதியையும் அமைதியையும் பெரிதும் பாராட்டுகின்றனர் என்றும் அக்கிப்பேட்டை தி. மு. க. செயலாளர் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

இலங்கை

அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் முதலாண்டு விழா 4—9—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு தோழர் எம். உமர் தலைமையில் வெள்ளவத்தை அனுத்திய பாடசாலையில் நடைபெறும். தோழியர் ஆனந்தீஸ்வரி சுப்ரமணியம் டி. எம். பீர்முகம்மது, இ.தி.மு.க. பொதுச் செயலாளர் இரா. அதிமணி, தேவதாசன், எஸ். கே. சுந்தரதான், தலுவத்த ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அறிஞர் அண்ணா படத்திறப்பு நிகழ்ச்சியும் இயல், இசை, கூத்தும் நடைபெறும்.

சென்னையில் சிறப்புக் கூட்டம்

மாநில மாநாட்டு நிதிக்காக 4-9-55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் கோகலே மண்டபத்தில் நடைபெறும். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் கலைஞர் மு. கருணாநிதி பேசுவார்.

மீஞ்சூர்

தி. மு. கழக சார்பில் 4-9-55 ஞாயிறு மாலை 5-மணிக்கு மீஞ்சூர் கடை வீதிக்கருகில் மாபெரும் கூட்டம் நடைபெறும். தோழர் தி. சு. சவுமியன் தலைமையில் தோழர்கள். என். வி. நடராசன் சி. பி. சிற்றரசு, ஆர். எஸ். பாண்டியன் பேசுவர்.

மயிலை

44-வது வட்ட தி. மு. கழக ஆறும் ஆண்டு விழா 9—9—55 வெள்ளி மாலை 6-மணிக்கு மயிலை கோபதி நாராயணசாமி செட்டித் தெருவிலுள்ள திடலில் நடைபெறும். தோழர் பி. வி. ஆனந்தன் தலைமையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவர்.

ரெட்ஹில்ஸ்

3-9-55 சனி மாலை 4-மணிக்கு ரெட்ஹில்ஸ் அடுத்த தீர்த்தகரையம்பட்டு கிராமத்தில் வள்ளுவர் வாசகசாலை திறப்பு விழா நடைபெறும். தோழர். டி. சன்முகம் எம். எல். ஏ., தலைமையில் கவிஞர் கண்ணதாசன் தோழியர் அருண்மொழி பேசுவர்.

அறிஞர் அண்ணா

அவர்களின் கருத்துரைகள்.

"உலக வரலாற்றிலே, தன்னுடைய உயர்ந்த நிலையை இழந்து, 'பட்டமரம் துளிர்க்குமா?' என்ற நிலையில்தான் இன்றைய தமிழகம் இருந்து வருகிறது. பேணி வளர்த்த பண்பாட்டினைத் தொடர்ந்து பாதுகாக்கக் கூடிய சிறந்த பரம்பரையை தமிழகம் ஏற்படுத்தாமற் போனதே, தமிழகம் வீழ்ச்சி யடைந்ததற்கு காரணமாகும்.

"மேம்பாடுற்று விளங்கிய கிரேக்க ரோம சாம்ராஜ்யங்களெல்லாம் கூட வீழ்ச்சி யடைந்ததற்குக் காரணம், அந்நாட்டு மக்களிடையே நிலவிய உயர்வு—தாழ்வு, கீழோர்—மேலோர் என்ற சமுதாயப் பிளவுகளேயாகும். அதுபோலவேதான் தமிழகம் வீழ்ச்சியுற்று கீழ்நிலையை அடைந்ததற்கு, தமிழகத்தில் சாதிவித்தியாசம் புகுந்ததே காரணம். எனவே நாம் சாதி சமயப் பூசல்களை ஒழிக்கவேண்டும்' 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற எண்ணத்தை அந்த உயர்ந்த பண்பாட்டை வளர்க்க முன்வரவேண்டும்; தமிழ் மொழியிலேயே பேசவும் எழுதவும் முன்வந்து அவ்வாறு செய்வதில் பெருமையும் அடைய வேண்டும்.

உலக வ்ரலாற்றிலே உன்னதமிக்க இடத்தைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று இழிநிலையுற்று வாடுகிறார்கள். சிறப்பை இழந்து சீர்கெட்டுக் கிடக்கும் தமிழர்கள் தங்கள் நாகரீகம் மீண்டும் மேலோங்கி வளர்ந்து உலக வரலாற்றிலும் இடம்பெற வேண்டுமென்றால் தங்களுக்கிடையே இருந்துவரும் சாதிப் பூசல்களைக் கண்டிப்பாக ஒழித்தே ஆகவேண்டும். அந்த சாதிப் பூசல்கள் இருக்கும் வரையில் எந்தவிதமான உன்னத இலட்சியமும் ஈடேறாது.

"கதிரவனின் வெப்பத்தில் வெண்ணெய் உருகுகிறது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு ஊமையனின் நிலை எப்படி இருக்குமோ அதுபோலவேதான் இன்று தமிழர்களின் நிலைமை இருக்கிறது. நமது உரிமைகள் குறித்து பல வாய்ப்புகள் இருந்த போதிலும் செயலற்ற தன்மையில் இருந்து வருகிறோம்,

"தமிழகத்தின் வரலாறே சரியாகக் கிடைக்கவில்லை; எனவே தமிழகத்தின் வரலாற்றைத் தொடர்ச்சியாகவும், கவர்ச்சியுடனும் தொகுத்துத் தரவேண்டிய மிகப் பொறுப்பு இன்றைய தமிழ்ப் பேராசிரியர்கள் முன்னிலையில் இருக்கிறது.

தமிழ் நாட்டின் வரலாற்றைத் தொகுத்துக் கொடுக்க ஒரு புலவர் குழுவை நிறுவி, அதனை வெளியிட கருமுத்து—தியாகராசனார் குடும்பம் முன் வர வேண்டும். தமிழ் மொழி ஆர்வமும், தமிழகப் பற்றும் மிகுந்த அளவில் கொண்டுள்ள அன்னாரின் குடும்பத்தார் வெளியிடும் தமிழக வரலாறு, தமிழ்ப் பண்பு மாறுபடாததாக இருக்கும் என்ற ஒரே நம்பிக்கையின் பேரில்தான் அப்பணியினை மேற்படி குடும்பத்தவர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தி. மு. க, கடவுள் தன்மையையும், சமயத்தையும் எதிர்க்கவில்லை, எல்லா மக்களையும் நேசிக்கும் ஒற்றுமையினை உருவாக்கி வளர்க்கும் சமயம் ஒன்று ஏற்படவேண்டுமென்றே விரும்புகிறது. இடைக்காலத்தில் புகுத்தப் பட்ட போலிச் சமயத்தையும், வேண்டாத சடங்கு, ஆச்சாரங்களையுமே தி. மு. கழகம் குறைகூறி வெறுத்து ஒதுக்குகிறது.

"மார்ட்டின் லூதர் தோன்றியிருக்காவிட்டால் கிறிஸ்துவ மதமே தூய்மை அடைந்திருக்க முடியாது; எனவே, சீர்திருத்தக் கருத்துக்களால் உலகிற்கு நன்மையே உண்டென்பதை உணர வேண்டும்."

இவ்வாறு அண்ணா அவர்கள் 25—8—55 மாலை 4½ மணிக்கு மதுரை தியாகராயர் கல்லூரி இளங்கோ மன்றச் சார்பில் திரு தி. சுந்தரம் தலைமையில் நடைபெற்றக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

*

"தமிழ் நாட்டில் உள்ள விவசாயிகளும், தொழிலாளர்களும் இரவு பகலாகக்

கண் தூங்காமல் அதிகமதிகமாக உழைக்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும் அவர்கள் பஞ்சம் பட்டினியால் தவிக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"புராணங்களையும் இதிகாசங்களையும் படித்துவிட்டால் மட்டும் போதாது. அவைகளால் ஏற்படும் தீமைகளையும் நாம் நன்கு கண்டறிய வேண்டும். புராண இதிகாசங்களைப் படிக்கக் கூடாது என்று கூறுவது கடவுளைக் குறை கூறுவதாகக் கருதவேண்டாம். கடவுள் பெயரால் ஒரு இன மக்கள் மற்றொரு சாரரால் ஏமாற்றப்படக் கூடாது என்பதே பொருள்.

"மதத்தையோ, பார்ப்பனரையோ நாங்கள் கண்டித்தால் மதவாதிகள் வருந்த வேண்டாம், நாங்கள் குறைபாடுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவற்றில் சீர்திருத்தம் செய்யவே முற்பட்டுள்ளோம்;

"திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையான அடிப்படைத் தத்துவங்களைப் போதித்து வருவதால்தான் தி. மு. கழகத்தில் ஒரு இலட்சம் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். ஆயிரத்து முன்னூறு கிளைக் கழகங்கள் தோன்றியிருக்கின்றன. திராவிட இன மக்கள் தங்களைப் பூட்டி வைத்திருக்கும் வடநாட்டு அடிமை விலங்கினை அறுத்தெறிய வேண்டுமென்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது.

" நம் நாட்டிலுள்ள இந்து மதத்தவர் வணங்குகின்ற தெய்வப் பண்பாடுகளில் மனிதனின் அறிவை வளர்த்து சுதந்திர மனிதனாக்குவதற்குப் பதில், அடிமைப் போக்கினை வளர்ப்பதற்குரியதத்துவங்களே நிறைய இருக்கின்றன."

இவ்வாறு அண்ணா அவர்கள் 19-8-55ல் விக்கிரமசிங்கபுரத்தில் தோழர் பி. ஏ. சாமி தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்;

*

நம்முடைய திராவிட நாடு நான்கு மொழிகளைப் பேசும் மக்களை உள்ளடக்கியது; அந்தத் திராவிடத்தை நாம் அடையத்தான் போகிறோம்.

"வடநாட்டவரின் கைப்பிடியில் சிக்கிக் கிடக்கும் நம்நாடு, சீரும் — செல்வமும் அற்று சீரழிந்து கிடக்கிறது; நம்மிடத்திலிருந்து வரிகள் மூலம் பணம் பணமாகக் கொள்ளையிட்டுவரும் வடநாட்டு ஏகாதிபத்தியம், நம்மிடமிருந்து வசூலித்த தொகையில் ரூபாய்க்கு 2 அணா வீதம்தான் நமக்குத் திருப்பித்தருகிறது; ஆனால் பாக்கித் தொகை வடநாடு வாழ்வுறச் செய்வதற்கான வழி துறைகளில் பயன் படுத்தி, நம்மைத் தவிக்க விடுகிறது;

'நம் நாடு—திராவிட நாடு; வாழ்க்கை வசதிக்குரிய எல்லாச் செல்வங்களையும் பெற்றிருக்கிறது; நமது நாடு மூவேந்தர்கள் ஆண்ட நாடு; அந்த நாட்டை நாம் தனியாகப் பிரித்துத்தான் ஆளவேண்டும்."

என்று அண்ணா அவர்கள் 24-8-55ல், போடிநாயக்கனூரில், தோழர் சிவலிங்கம் தலைமையில் நடைப்பெற்றப் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

ஆதிக்கக் கும்பலுக்கு டாக்டர் கேஸ்கரின் டோஸ்!

"இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க எண்ணினால் இந்தி ஒரு போதும் இந்தியாவின் தேசிய மொழியாக ஆக முடியாது;

"இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள், இந்தியைத் தாங்களாகவே முன்வந்து, தேசிய மொழி என்று ஏற்றுக் கொண்டாலன்றி இந்தி தேசிய மொழியாக உருவாகி விடமுடியாது;

"இந்த நிலையை இந்தி பெறுவதற்கு, முதலில், வேறு எல்லா வட்டார மொழிகளில் உள்ள நல்லனவற்றையெல்லாம் இந்தி மொழி ஏற்றுக் கொள்ள வேண்டும்;

"மேலை நாட்டில் ஜெர்மானிய மொழியும், பிரெஞ்சு மொழியும் எப்படிப் பரஸ்பர தொடர்பு கொண்டு வளம் பெற்றனவோ, அவ்வாறே இந்தி மொழியும் இதர இந்திய மொழிகளுடனும் நீடித்த தொடர்பு கொண்டு, வளம் பெற முயற்சிக்க வேண்டும்;

"இது மிகவும் முக்கியமான ஒன்றாகும்; ஏனெனில், வங்காளி, மராத்தி, தமிழ் போன்ற மொழிகளுடன் ஒப்பிட்டால், இந்தி, மிகவும் பின்தங்கிக் கிடக்கிறது; மேலும் ஆங்கிலத்துடன் தொடர்புகொண்டு அந்த மொழிகள், வளம் பெற்றிருக்கின்றன;

அண்மையில் இலக்கிய மாநாடு ஒன்றில் பேசுகையில், மத்திய மந்திரி டாக்டர் கேஸ்கர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

தினகரனின் கோணல் புத்தி

மணி, கொழும்பு

'இலங்கையில் நாத்திகம் பரவுகிறது. சஞ்சிகைகள், நாடகங்கள், சினிமாக்கள் மூலம் தமிழ் நாட்டிலிருந்து இது பரப்பப்படுகிறது இதைப் பரப்புபவர்களின் நோக்கம் இருவகைகள். ஒன்று நாத்திகத்தை பரப்புவது. மற்றொன்று இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு பணம் கடத்துவதின் மூலம் கள்ளத்தனமாக பணம் சம்பாதிப்பது' இவ்வாறு 14—8—55 ஞாயிற்றுக் கிழமை 'தினகரன்' இதழில் 'நாத்திகரின் புதியவழி' என்ற தலைப்பிட்டு ஆசிரியர் தனது குறிப்பிலே குறிப்பிட்டது மட்டுமின்றி இவைகளை உடனே தடை செய்ய வேண்டுமென்றும் சிபாரிசு செய்திருக்கின்றார். தபாற் பகுதியும், நிதிக்கட்டுப்பாட்டுப் பகுதியும், போலீசுப் பகுதியும் கவனித்தால் சரியாய்ப் போய்விடுமாம்! என்னே இவரின் கண்டு பிடிப்பு!

நாத்திகம் மீண்டும் தலையெடுத்துள்ளது என்று குறிப்பிடுவதிலிருந்து இவர் இடைக்காலம் என்று ஒரு காலத்தை புதிதாக உண்டாக்குகின்றாரே அது எந்தக் காலம்? பணம் கடத்துவதன் மூலம் கிடைக்கும் லாபம் சஞ்சிகைகள் அச்சிடவும் சுகமாக வாழ்க்கை நடத்தவும் போதுமாம் அதனால் இச்சஞ்சிகைகளை இலவசமாக கொடுத்து நாத்திகத்தைப் பரப்புகின்றார்களாம். மற்றபடி இப்பத்திரிகைகளை பணம் கொடுத்து வாங்குவோர் அதிகமில்லையாம். இப்படியாகப் பலப்பல விளக்கங்கள் தந்துள்ளார். இத்தனைக்கும் ஆதாரமாக ஒரு உதாரணத்தைக்கூட காணோம்.

'சொல்கின்றார்கள்' 'கூறப்படுகிறது' 'கேள்வி' என்றெழுதி மழுப்பி யிருக்கின்றார். இவர் குறிப்பிட்டுள்ளவற்றில் ஒன்றுக்கேனும் ஆதாரம் காட்ட முடியுமா? தனக்கு நன்கு தெரியாதவற்றைப்பற்றிக் கூற முற்படும் மட்டரகக் கோஷ்டிகளைப்போல் ஆசிரியர் பொறுப்புகளிலிருப்பவர்கள் நடந்து கொள்வது பொருத்தமற்றது. குறுகிய நோக்கமுள்ளவர்கள் இந்த மாதிரி உயர்ந்த பொறுப்புகளி லிருப்பதற்கு அருகதையற்றவர்கள்.

பொதுவுடமைத் தத்துவம் பரவுவதைத் தடுக்க அமெரிக்க வெளியீடுகட்கும், மதச்சரிவை தூக்கி நிறுத்த அவ்வப்போது அழைக்கப்படும் திருப்புகழ் கோஷ்டிகட்கும் மதப் பிரச்சாரம் பண்ண அடுத்தடுத்து அழைக்கப்படும் மதத் தலைவர்கட்கும் பெருவாரியாக பணம் உதவி யளிக்கப்படுவதுதான் உண்மையாக இருக்க முடியுமே யல்லாது இதைவிடுத்து நாத்திகத்தைப் பரப்புவதற்காக சஞ்சிகைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகிற தென்பது சுத்த அபத்தமானது.

தமிழ் நாட்டிலிருந்துவரும் எல்லாவித சஞ்சிகைகட்கும் இலங்கை மக்களின் ஆதரவு நிறைய உண்டு. இதைப் பற்றி அச்சஞ்சிகைகளை வாங்கும் நேயர்களிடம் கேட்டால் விபரம் புரியும். இச்சஞ்சிகைகட்கு இருக்கும் ஆதரவைக் கண்டு குறிப்பிட்ட விலையைவிட கூடுதல் விலைக்கும் அதன் ஏஜெண்டுகளால் விற்கப்படுமாம். நியாய விலையில் சஞ்சிகைகள் கிடைப்பதற்காக சஞ்சிகைகட்குரிய பணத்தை நேயர்கள் முன் கூட்டியே கொடுப்பதுண்டாம்.

நிலைமை இவ்வாறிருக்க ஆசிரியர் அவசரத்தில் நேர்மை தவறி யிருக்கின்றார். இதிலிருந்து சஞ்சிகைகள் அதிகம் விற்பதில்லை என்பதும் பணம் கடத்துவதின் மூலம் கிடைக்கும் லாபத்திலிருந்தே அச்சஞ்சிகைகள் அச்சிடப்படுகிறதென்ற கூற்று முற்றிலும் உண்மைக்கு மாறானது. அடுத்தபடியாக நாத்திகம் பரப்பப்படுகிறது என்ற மற்றொரு குற்றச் சாட்டைப்பற்றியும் கவனிப்போம்.

'நாத்திகம்' இது பழமை விரும்பிகளாலும் மதப்பித்தர்களாலும் கொடுக்கப்படும் பெயர். பெயரைப்பற்றி கூறுமுன் செயலைப்பற்றி கவனிப்போம். மதத்தின் மூலம் போதிக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்ற ஒழுக்கம், நீதி, நேர்மை இவைகளின் தன்மைக்கு குறைந்த வகையில் ஆசிரியர் குறிப்பிடும் நாத்திகச் சஞ்சிகைகளில் ஒரு வரியாவது வெளியிட்டிருப்பதாக காட்ட முடியுமா? மதம் எங்கெல்லாம் அதிகம் வளர்ந்திருக்கிறதோ அங்கெல்லாம் சாதிக் கொடுமைகள் தாண்டவமாடுவதைக் காண்கிறோம். மதவெறி எங்கு அதிகமாக இருக்கிறதோ அங்கு பழமையின் பிடிப்பைக் காணலாம். பழமையை அதிகமாக வளர்த்து மக்களை மாக்களாக்கிறது மதம். வளர்ந்து வரும் மக்கள் அறிவை மடக்கி மறுஉலகத்திற்கு இழுக்கிற செயல்தான் மதம் மக்களுக்கு செய்யும் நன்மையா? எனவே மதம் மக்களைச் சுரண்டி வாழுகிறதே யொழிய மக்கள் வாழ்வுக்கு மதம் உதவவில்லை. மாறாக கேடு செய்து வருகிறது. சில மதங்களில் வரும் கடவுட் கொள்கைகள் இதற்கு எடுத்துக் காட்டு.

இதுவரை செய்துவரும் மனித முயற்சியின் மூலம் மக்கள் வாழ்க்கை பல துறைகளிலும் உயர்ந்து சிறந்து விளங்குகிறதைப் பார்க்கிறோம். உயர்ந்துள்ள விஞ்ஞான வாழ்வை நன்கு அனுபவிக்கிறோம். அறிவு வளர்ச்சியின் காரணமாக பல நல்ல ஒழுங்குகளை ஏற்படுத்தி ஒழுகி வருகின்றோம். இந்நிலையில் மதம் மதமென்று ஆசிரியர் அங்கலாய்க்கின்றார். பரிதாபம்—பரிதாபம்!!

உழைப்பாளியால் பெற்ற செல்வம் கடவுளால் கொடுக்கப் படுகிறதாகக் கருதப்படுகிறது. உழைப்பின் உயர்வும் உழைப்பவரின் மதிப்பும் உணரப்படுவதில்லை. இதனால் செல்வந்தருக்கும் கடவுளுக்கும் தொடர்பு ஏற்படுகிறதேயொழிய செல்வந்தருக்கும் தொழிலாளிக்கும் ஏற்படுவதில்லை. இக்கேடு மத நம்பிக்கையால் விளைகிறது. அறம் பாழாகிறது. இவ்விதக் கேடுகளை விள்க்குவதில் ஏடுகளைவிட நாடகங்கள் சினிமாக்கள், அதிகம் உதவுகிறது. எனவேதான் ஆசிரியர் குறிப்பிடும் 'நாத்திகர்' நாடகத்தையும் சினிமாவையும் பயன்படுத்துகிறார்கள். இம்மாதிரி நாடகங்கள் சினிமாக்களுக்கு மக்கள் ஆதரவு நிறைய இருந்து வருகிறது. இதன் மூலம் வலியோர் எளியோரை வாட்டும் தன்மையையும் சாதித்திமிரை உடைத்தெறியும் பாதையையும் கற்பின் மகத்துவத்தையும் இன்னும் பல நல்லொழுக்க வழிகளையும் உண்டாகிறதே தவிர கேடுபயக்கவில்லை ஏனெனில் இவை அனைத்தும் மக்களின் தற்கால வாழ்வை யொட்டியதாகவே அமைக்கப்படுகிறது. ஆகவே உலக மக்கள் அனைவரும் மறுமலர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிற இந்நாளில் இலங்கை 'தினகரன்' ஆசிரியர் அறிவு வளர்ச்சியை—அறிவியக்கத்தாரின் பணியைத் தடுக்க இலங்கை ஆட்சி பீடத்தாருக்குத் "தூபம்" போடுவது அறிவுடமையாகாது—அப்போக்கு வெற்றியும் தராது என்பதை இனியாகிலும் உணர வேண்டுகிறோம்.

திரு. வி. க. பிறந்தநாள் விழா

இவ்விழா 14—8—55 ஞாயிறு காலை 7-மணிக்கு திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றசார்பில் பெரம்பூர் பாரக்கிலுள்ள மன்ற இல்லத்தில் இனிது நடைபெற்றது. மன்றத் தலைவர் ஜி முனுசாமி தலைமையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம்.ஏ. எல்.டி., தோழர் கே. எம். கண்ணபிரான் ஆகியோர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் செய்த தொண்டினைப்பற்றி விரிவுரையாற்றினார்கள். பகல் 12-மணிக்கு தோழர் ச நல்லதம்பி முன்னிலையில் சுமார் 500 ஏழைகளுக்கு உணவளிக்கப் பட்டது, மாலை 6-மணிக்கு மன்றச் செயலாளர் தோழர் க. வரதன் தலைமையில் திரு. வி. க. திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மன்ற உறுப்பினர் தோழர் டி. எஸ். சண்முகம், பி. சி. கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் திரு. வி. க. தொழிலுலகுக்கு செய்த தொண்டினைப்பற்றி விரிவுரையாற்றினார்கள். மன்றத் துணைச் செயலாளர் கதிர் டி. சுப்ரமண்யம் நன்றிகூற 9-30 மணிக்கு கூட்டம் முடிந்தது.

தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கு மன்றத் தலைவர் மு. மாணிக்கம் வரவேற்பு மடல் வாசித்தளித்தார்.

குடியேற்றம்

27—8—55 இரவு 9-மணி அளவில் பகுத்தறிவு இளைஞர் மன்ற சார்பில் இராசன் பண்ணையில் மன்றத்தின் பொருளாளர் தோழர் பி. ஜி இராசன தலைமையில் கூடி கீழ்காணும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

இந்திய துணைகண்டத்தின் ஒருபகுதியாகிய கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகளை போர்ச்சுகீசியர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க போராடி உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி போராடிக் கொண்டிருக்கும் அறப்போர் வீரர்களை பாராட்டுவதுடன் அறப்போரில் உயிர் நீத்த வீரர்களின் குடும்பத்திற்கு நிவாரண நிதி அளிக்கமாறு இந்திய அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம்.

மன்றத்தின் செயற்குழுவை கலைத்து விரைவில் புதிய செயற்குழுவை அமைக்க ஆவன செய்யுமாறு மன்றத்தின் செயலாளரை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

திருவண்ணாமலை

திராவிட மாணவ முன்னேற்றக் கழக துவக்கவிழா திருவண்ணாமலை அறுபத்து மூவர் மடத்தில் 28—8—55 மாலை 5-மணிக்கு திருவண்ணாமலை நகராண்மைக் கழக முன்னாள் தலைவர் ப. உ. சண்முகம் துவக்கி வைத்தார். இக்கழகத்திற்கு செயலாளராக கலைச்செல்வன், துணைச்செயலாளராக எழில்நிலவன், பொருளாளராக வள்ளுவதாசன் ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் செயற்குழு உறுப்பினர்களாக நா இராசன், தா. நடராசன், சிவப்பிரகாசம், சண்டாமார்க்கன், ஜான்வில்லியம், சுப்பிரமணியன், ராமமூர்த்தி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் இக்கழகத்தை மத்திய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தோடு சட்டரீதியாக இணைக்க தீர்மானிக்கிறது. என்றும் மாணவர்கள் இக்கழகத்திலுள்ள சட்டதி[illegible]ங்களை எம்முறையில்கடைப்பிடிக்க வேண்டும் என்றும், கொள்கையை எந்த முறையில் வளரச் செய்ய வேண்டும் என்றும் இன்னும் சில அறிவுரைகளை மாணவர்களுக்கு தெளிவாக விளக்கினார் ப. உ. சண்முகம். அதன் பின் தோழர் து. சுப்பிரமணியன் பேசினார்.

முதல் பக்கத் தொடர்ச்சி

தாக நடைபெற்ற நகராண்மைக் கழகத் தேர்தல்களிலும் தி. மு. கழகம் இக்கொள்கையைத்தான் மேற்கொண்டுள்ளது.

எனவே அரசியல் பிரச்சினைகளற்ற நகரமன்றங்களில் கூட பொதுப் பணியின் பண்புக்கு நேர்மாறாக தங்களின் ஆதிக்கமே தலைவிரித்தாட வேண்டும் என்ற நப்பாசை எந்தக் கட்சியினரிடமிருப்பினும் அத்தகு மட்டரகமான எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது வாக்காளர்களின் கடமையாகும் என்பதைப் பணிவன்புடன் எடுத்துக் காட்டுகிறோம்.

நிற்க, திராவிட முன்னேற்றக் கழக தோழர்கள் இத் தேர்தலில் நமது கழகத்தைச் சார்ந்தோர் போட்டியிடும் வட்டங்களில் பொதுச்செயலாளரின் அறிக்கையில் கண்டுள்ளதற் கேற்ப—அதாவது கழகத்தின் சின்னத்தையோ—பெயரையோ உபயோகிக்காமல் அபேட்சகராக நிற்கும் தோழரின் பொதுத் தொண்டினை எடுத்துக்கூறி வெற்றி பெற வழிவகை தேடவேண்டுவதுடன், நம் கழகத் தோழர்கள் போட்டியிடாத வட்டங்களில் பொதுச்செயலாளரின் அறிக்கையில் குறித்துள்ளபடி நகர மன்றங்களில் கட்சி ஆதிக்கத்துக்கு இடமளிக்காதவாறு அதே சமயத்தில் நமது கழகத் தோழர்களுக் கிடையே அபிப்ராயபேதம் ஏற்படாவண்ணமும் ஆவன செய்ய வேண்டுகிறோம்.

இவ்வகையில் நாம் காங்கிரசாருக்[ு] வழிகாட்டியாக இருத்தல் வேண்…

நக்…

சுல்தானா ரசியா தொடர்ச்சி

னும் குரானின் முன்பு தெளிவற்ற மந்திரிப் பிரதானியரும் இஸ்லாமிய பெருமக்களின் முன்பு வீண் ஜம்பமும் வரட்டுப் பிடிவாதமும் புரியும் ஓம்ராகிசளும்—பிரபுக்களும் எதிர் நின்று பேச முடியாது! பேசக்கூடாது! பேசவும் மாட்டார்கள். என் தந்தைக்குப் பிறகு என் குறைகளை முறையிட எனக்குக் கிடைத்த ஒரே சாதனம்—தொழுகை வாசல்தான், அதன் முன்நின்று அங்கு வரும் இஸ்லாமிய பெருமக்களிடம் என் குறை நீக்கச் சொல்வேன்—இழந்த என் அரசவார்சுரிமையை மீண்டும் பெறுவேன். இல்லையேல் எனக்கும் மற்றுமுள்ள மாசற்றவர்களுக்கும் ஒரு தீங்கு நேராவண்ணமாகிலும் செய்வேன்! நாளையே இந்த பணிக்கெனச் செல்வதென்று தீர்மானித்திருக்கிறேன். புனிதமான பச்சை உடை உடுத்தி நாளையே பள்ளி வாசல் செல்கிறேன். குறைகளை முறையி... இரண்டிலொன்று இதுதான் நானெடுக்கும். முடிவு என் விண்ணுயர் கோபுரமே. வாழ்ந்தால் வீரவாழ்வு. இல்லையேல் மரண இன்பம்—இதில் எதையாகிலும் நாளை நம் இஸ்லாமிய பெருமக்கள் எனக்குத் தரட்டும்; மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுகிறேன்!

என்று இப்படித்தான் முடிவு கண்டாள் ரஸியா. பல நாட்களின் முறையீடு-உடனடியாகப் பயனளிக்கா விட்டாலும் புதியதோர் எண்ணத்தையாகிலும் உருவாக்கித் தந்தது — அது போதும்! —(தொடரும்)

அடுத்த வாரம்

9—9—55 திராவிடன் இதழில் இரா. இளஞ்சேரன் தீட்டும் பூங்கொத்துகள், திருவேடம் வரைந்துள்ள பஞ்சாபில் 3-நாட்கள் பகுதியின் முக்கிய குறிப்புகள், கேள்வி—பதில், கலையரங்கம் முதலியன வெளிவரும்.

நிர்வாகி—'திராவிடன்'

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப் பித்தன்

27

முகம்மதியர் கல்வி

1872—73-ல் முகம்மதியர்களின் முன்னேற்றத்திற்கான பிரத்யேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, மிஸ்டர் இ. பி. பவல் அவர்கள் இதற்கான ஒரு திட்டம் தயாரித்து கவர்னருக்கு சமர்ப்பித்தார். இத்திட்டத்தை கவர்னர் அங்கீகரித்து முகம்மதியர்களுக்கென தனியாகப் பள்ளிகள் நிறுவி நடத்தி வருவதற்கான உத்தரவு பிறப்பித்தார். இவ்வுத்திரவின்படி ராஜமுந்திரி, எல்லூர், மசூலிப்பட்டிணம், கர்னூல், அதோனி, கடப்பை, ஆற்காடு, வேலூர், திருச்சினுப்பள்ளி, நாகூர் முதலிய நகரங்களில் முகம்மதிய ஆரம்பப் பள்ளிகள் நிறுவப்பட்டன. மலையாளத்தில் மாப்பிள்ளைமார்களுக்கென விசேட கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டு பள்ளிகள் நிறுவப்பட்டன. மிஸ்டர் கார்த் வெய்ட் என்பார் முயற்சியினுல் மாப்பிள்ளைமார்களின் துவக்கப் பள்ளிகள் வளர்ச்சியடைந்தன, இம்முகமதியப் பள்ளிகளில் இந்துஸ்தானி இங்கிலீஷ் மொழிகள் கற்பிக்கப்பட்டு வந்தன, 1880—81-ம் ஆண்டு புள்ளி விவரப்படி முகம்மதியர்களுக்கென 11 சர்க்கார் பள்ளிகளும் 9 முனிசிபல் பள்ளிகளும் இருந்தன. சேலத்தில் 5 முனிசிபல் பள்ளிகள் இருந்தன. இப்பள்ளிகளில் ஆங்கில நாட்டு மொழிகள் கற்பிக்கப்பட்டு வந்தன. பெல்லாரியில் 5 முனிசிபல் பள்ளிகள் இருந்தன; இவைகளில் இந்துஸ்தானி மொழிமட்டுப் கற்பிக்கப்பட்டு வந்தது. தஞ்சை, கும்பகோணம், கொச்சி ஆகிய நகரங்களில் நடந்து வந்தப் பள்ளிகளிலும் இந்துஸ்தானி கற்பிக்கப்பட்டு வந்தது. தனிப்பட்டோர் நடத்திவந்த சில முக்கிய பள்ளிகளும் இருந்தன, சென்னையில் ஹாரிஸ் பள்ளியும், எல்லூர், மசூலிப்பட்டினம், திருச்சி ஆகிய நகரங்களில் மிஷன் பள்ளிகளும் இருந்து வந்தன. இவைகளைத் தவிர 210 நாட்டு மொழிப் பள்ளிகள் நடந்து வந்தன. இவைகளில் 6353 பேர் கல்வி பெற்று வந்தனர்.

முகம்மதியர்களுக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக சலுகைகளாவன: (1) பார்சி அல்லது அரபு மொழிகள் அவர்களது இலக்கிய மொழிகளாக கருதப்பட்டு அவைகள் பரிட்சைக்கு உரியனவாகச் செய்யப்பட்டன. (2) முகம்மதிய மாணவர்கள் அரைச் சம்பளம் கொடுத்து கல்வி கற்கலாம் என்ற சலுகை கொடுக்கப்பட்டு முகம்மதிய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் கல்வி கற்பதற்கான வழி செய்யப்பட்டது. (3) பரிட்சைகளில் முதல்தரமாகத் தேறும் மாணவர்கட்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து ஊக்கமளிக்கப்பட்டது. (4) முகம்மதியப் பள்ளிகளுக்கென தனி டிபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு முகம்மதியர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டது. (5) தனி முகம்மதிய ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஒன்று சென்னையில் துவக்கப்பட்டது. அரசாங்க உத்தியோகங்களிலும் முஸ்லிம்களுக்கு விசேஷ சலுகைகள் கொடுக்கப்பட்டன.

விவசாயக் கல்வி

சென்னை சைதாப்பேட்டையில் 1854-ல் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டு காரியமாற்றி வந்தது. 1872-ம் ஆண்டு பள்ளி மாணவர்கட்கு விவசாயக் கல்வி போதிப்பதற்கான யோசனை இருந்து வந்தது. 1873-ஆண்டு இப்படிப்பட்ட கல்வி முறை வகுப்பதற்கான காலம் இன்னும் ஏற்படவில்லை என முடிவு செய்யப்பட்டு யோசனை கைவிடப்பட்டது. ஆனுலும் சைதாப்பேட்டை விவசாய ஆராய்ச்சி நிலையம் பொது மக்கள் கல்வி அபிவிருத்திக்கு பயன்பட வேண்டும் என்ற எண்ணம் சர்க்காருக்கு இருந்து வந்தது. அதனுல் அந்த ஆராச்சி நிலையத்தில் விவசாயக் கல்வி போதிக்கும்படியான காரியங்களை மேற்கொள்வதற்கான யோசனைகளை கூறும்படி ரெவின்யூ போர்டாரை சர்க்கார் கேட்டனர். சைதை விவசாய ஆராய்ச்சி நிலைய அதிகாரியாக இருந்த மிஸ்டர் ராபர்ட்ச்ன் என்பார் தமது யோசனையைக் கூறினுர். தேர்ச்சிப் பெற்ற அதிகாரிகளின் தகுதியும் திறமையும் வீணுகப் போவதைத் தடுத்து மக்களுக்குப் பயன்படும்படிச் செய்யலாம். விவசாய அபிவிருத்திப்பற்றிய நுணுக்கங்களையும் விவரங்களையும் பொதுமக்களுக்குஎடுத்துக் கூறி அவர்களை விவசாயத் தொழிலில் அறிவாளிகளாகச் செய்யலாம்,

இக்காரியத்தைமேற்கொண்டு வெற்றிகரமாக நடத்துவதற்கான சாதனங்களும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் இருக்கின்றன என்று கூறி சைதையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றையும் அனுப்பி வைத்தார். இத்திட்டத்தை முழுஅளவிற்கும் ஒத்துக் கொள்ளவில்லையானுலும் முதலில் விவசாயக் கல்வி போதிக்கும் வகுப்பு ஒன்றை நடத்திப் பார்க்கத் தீர்மானித்தனர் சர்க்கார். 1876-ம் ஆண்டில் ராபர்ட்சன் மறுபடியும் ஒரு புதிய திட்டத்தை தயாரித்து அனுப்பி கல்லூரி நிறுவவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினுர். சர்க்கார் இத்திட்டத்தில் சில மாறுதல்களை விரும்பினர். ஆகவே 1876-ல் ராபர்ட்சன் மறுபடியும் திருத்தியமைத்த ஒரு திட்டத்தை சர்க்காரிடம் அனுப்பி வைத்தார். இத்திட்டம் கடைசியில் வெற்றிபெற்றது. இந்த ஆண்டில்தான் அதாவது 1876ல் கோயம்புத்தூரில் ஒரு விவசாயப் பள்ளி நிறுவப்பட்டது. இந்த விவசாயப் பள்ளியானது பின்னர் விவசாயக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது.

இக்காலத்தில் ஏற்பட்ட புதியக்கல்வி முறையில் குறிப்பிடத்தக்க தொன்றுண்டு. அதுதான் உடற்பயிற்சிக் கல்வியாகும். சர்க்கார் நடத்திவந்த பள்ளிகளில் உடற்பயிற்சிக்கென எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமலே இருந்து வந்தன. ஆனுல் கிருஸ்துவப் பாதிரிகளால் நடத்தப்பட்டு வந்தப் பள்ளிகள் சிலவற்றில் உடற்பயிற்சிக்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1876–77-ம் ஆண்டிற்கான சென்னை அரசாங்க பட்ஜட்டில் கல்விக் கூடங்களில் உடற்பயிற்சிக்கான விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுக் கருவிகள் முதலியவைகட்கென 10000 ரூபாய் ஒதுக்கும்படியாக கர்னல் மாக்டனுல்ட் கேட்டுக் கொண்டார். அரசாங்கத்தினரும் அத்தொகையை அனுமதித்தனர். 1876-ல் மாக்டனுல்ட் அவர்கள் பள்ளி இன்ஸ்பெக்டர்களுக்கு தாக்கீது ஒன்று அனுப்பி உடற்பயிற்சிக் கல்வியை எல்லாப் பள்ளிகளிலும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை தெரியப்படுத்தும்படிக் கேட்டார். ஆனுல் இன்ஸ்பெக்டர்கள் இதில் சிரத்தை காட்டவில்லை. 1877-78-ம் ஆண்டில் சர்க்கார் பள்ளிகளிலெல்லாம் உடற்பயிற்சிக் கல்வியைப் புகட்டும்படி உத்தரவு அனுப்பப்பட்டது. சேலம், கடப்பை, கர்னூல், மதுரை, பெல்லாரி, பெர்ஹாம்பூர் ஆகிய இடங்களில் நடந்துவந்த ஜில்லாப் பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் நியமிக்கப்பட்டனர். உடற்பயிற்சிக்கான சாதனக் கருவிகளும் வாங்கி வழங்கப்பட்டன. சர்க்கார் உதவி பெற்ற பள்ளிகளில் சிதம்பரம் பச்சையப்பன் உயர்தரப் பள்ளிதான் உடற்பயிற்சிக் கல்விக்கான மானியம் பெற்று தக்க உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரை நியமித்தது. 1878-ம் ஆண்டு சென்னை பீபிள்ஸ் பார்க்கில் ஒரு உடற்பயிற்சி சாலை 1138 ரூபாய் செலவில் சென்னை பள்ளி மாணவர்கட்காக ஏற்படுத்தப்பட்டது, 1879-ம் ஆண்டு எல்லாப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வியை கட்டாயமாக்கி சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்தனர்.

பரிட்சைமுறை வரலாறு

நடுத்தரப் பள்ளிகளில் பரிட்சை முறையைப் புகுத்த 1869-ம் ஆண்டு வரை அத்திட்டம் கவனிக்கப்படாமலே இருந்து வந்தது. கல்வி இலாக்கா டைரக்டராக இருந்த கர்னல் மக்டனுல்ட் அவர்கள் 1875-ம் ஆண்டு பிப்ரவரியில் ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ ஆகிய இடங்களில் நடத்தப்படுவது போன்ற மத்தியப்பள்ளிப் பரிட்சையை புகுத்துமாறு சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட்டிற்கு எழுதினுர். ஆனுல் சிண்டிகேட் பரிட்சைகள் ஏற்படுத்துவதை ஆட்சேபித்து மறுத்துவிட்டது. மாக்டனுல்டோ பல்கலைக் கழகத்தின் தொடர்பின்றியே பரிட்சை முறையைப் புகுத்துவதற்கான திட்டம் ஒன்றை தயாரித்தார். இந்த சமயத்தில் இந்திய சர்க்காரிடமிருந்து மத்தியப் பள்ளி பரிட்சை என்றும், துவக்கப் பள்ளி பரிட்சை என்றும், கீழ்த்தர துவக்கப்பள்ளி பரிட்சை என்றும் மூன்றுவிதமான பரிட்சைகளைப் புகுத்தும்படி தாக்கீது வந்தது. இந்தியா முழுவதும் ஒரேவிதமான கல்வித் தரத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியே இப்பரிட்சைகள் ஏற்படுத்துவதற்கான முயற்சி. ஆனுலும் 1879-ம் ஆண்டு வரையில் எந்தவிதமான பரிட்சையும் புகுத்தப்படவில்லை. 1877-ம் ஆண்டில் மாக்டனுல்ட் மறுபடியும் முயற்சி செய்ததும், பலிக்கவில்லை. அவரது மூன்றுவது முயற்சியும் தோல்வியையே கண்டது. கடைசியாக 1879-ல் மறுமுறையும் இந்திய சர்க்காரின் கட்டளையை சுட்டிக் காட்டி ஒரு புதிய முறையான பரிட்சைத் திட்டத்தை சமர்ப்பித்தார். இந்த பரிட்சை முறையானது சர்க்கார் உத்தியோகங்களை நாடி வருகின்றவர்கட்கு மட்டுமேயென்றும் இதன்படி 15 ரூபாய் முதல 30 ரூபாய் வரையில் உள்ள சர்க்கார் உத்தியோகங்கட்கு மட்டுமே இந்தப் பரிட்சை என்றும் வகுக்கப்பட்டிருந்தது, இதை சர்க்கார் அங்கீகரித்து 1879-ம் ஆண்டு அக்டோபரில் உத்தரவு பிறப்பித்தனர். இந்த மத்தியப் பள்ளி பரிட்சையானது முதன் முதலாக 1880-ம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்றது. மாக்டனுல்ட் அவர்கள் ரூ 30 முதல் 100 வரையுள்ள உத்தியோகங்கட்கு மெட்ரிகுலேஷன் பரிட்சையும், ரூ 100 முதல் 250 வரை சம்பளமுள்ள உத்தியோகங்கட்கு எப். எ. பரிட்சையும் ரூ 250 மேற்பட்ட உத்தியோகங்கட்கு பி. எ, பரிட்சையும் வைக்கும்படியும் தம் திட்டத்தில் கூறியிருந்தார்.

மேற்கூறிய பரிட்சைகள் யாவும் கிரிக் என்பார் கல்வி இலாகா டைரக்டராக வந்த காலத்தில் நிறுத்திவிடப்பட்டன. இவைகளுக்குப் பதில் 1879ம் ஆண்டு மே மாத இந்திய அரசாங்க கட்டளையை அனுசரித்து மேல் கீழ் துவக்கப் பள்ளி பரிட்சைகள் புகுத்தப்பட்டன,

—தொடரும்

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
„ 108-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
„ கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
„ வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

திராவிடன்

சந்தா விவரம்

உள்நாடு

ஆண்டு சந்தா ...	ரூ.	8	0	0
ஆறுமாதம் ...	ரூ.	4	0	0
தனிப்பிரதி ...	ரூ.	0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ.	9	0	0
ஆறு மாதம் ..	ரூ.	4	8	0
தனிப்பிரதி ...	ரூ.	0	8	6

பாலைவனம் பலன் தருகிறது!

சா. வெ. பாண்டியன்

பாலைவனத்தின் பண்பைப் பற்றிச் சிந்தித்தாலே ஒருவித அச்சம் ஏற்படுகிறது—நமக்கு! பாலைவனம் என்றதும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை தெரியும் ஒரே மணற் பரப்பு—அதிலிருந்து எழும் அனல் வீச்சு, மரம் செடி கொடி முதலியவைகள் இருக்க முடியாதவாறு உண்டாகிற மணற் குடு, மனித நடமாட்டத்திற்கே வழியற்ற முறையில் இருக்கும் உஷ்ணம், திடீரென்று கிளம்பும் புயல், இவைகள்தான் நம் கண்ணுக்குத் தென்படுகின்றன!

பனிப் பாலைவனம் என்றாலோ எங்கும் ஒரே பனிமயமாக இருக்கும்! மரஞ் செடி கொடிகள் இருக்காது! குளிர் அதிகமாக இருக்கும்! திடீரென்று பனிப் புயல் வேறு கிளம்பும்! பொதுவாக இருவகைப் பாலைவனங்களும் மக்களுக்கு பயத்தைத் தவிர—பலனைக் கொடுத்ததாக நாம் அறிந்ததில்லை முன்பு!

ஆனால் இன்றோ நிலைமை வேறாகி இருக்கிறது. 'பாலைவனம் சோலைவனம் ஆகுமா' என்றிருந்த நிலைமாறி பாலைவனம் சோலைவனமாகி மக்களுக்கு பலன்தரவும் ஆரம்பித்திருக்கின்றது. விஞ்ஞான யுகம் இந்த அளவிற்கு வளர்ந்து விட்டிருக்கிறது!

உலகிலே பெரிய பாலைவனமாக இருக்கும் 'சகாரா' விளைநிலமாக்கப்பட்டு வருகிறது, திரு 'பேக்கர்' செய்த முயற்சியினால் வரண்ட 'சகாரா' வளம் கொழிக்க ஆரம்பித்து விட்டது! இது போலவே ரஷ்யாவிலுள்ள பனிப்பாலைவனமும் ஓரளவு வரை பண்படுத்தப்பட்டு பயனளித்து வருகிறதாம்! இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த வல்லுனர்களின் உழைப்பை ரஷ்யா சென்றிருந்த நேரு பெருமானே நேரில் கண்டு களித்ததாகச் செய்திகள் கிடைத்தன!

பாழ் நிலமாக—மனிதன் பாதங்கள் படுவதற்கே இலாயக்கற்ற நிலம் இன்று பயன்படுத்தப்பட்டு—பலன் தருகிறது, மனிதனின் முயற்சியால்!

•

பக்தி என்பது கடவுளுக்கு வழிபாடு செய்வதல்ல! பிரார்த்தனை செய்வதல்ல! ஏழைகளைக் காப்பாற்றுவதுதான் பக்தி!

குடிசையில், குப்பை மேட்டில் வாழும் மக்களை சமயம் புறக்கணித்து விட்டது. சமயம் மக்களிடையே பல வகுப்புக்களையும், வேற்றுமைகளையும் வளர்த்து விட்டது.

மக்களுக்காகச் சமயமே அன்றி சமயத்திற்காக அல்ல! முன்னேற்ற வழியின் குறுக்கே உண்மையான சமயம் நிற்க முடியாது.

ஏராளமான பணம் செலவு செய்து புதிது புதிதாக கோயில் கட்ட வேண்டிய அவசியமில்லை. கோவில் கட்டுவதற்குப் பதிலாக அப்பணத்தை கல்வி நிலையங்கள் வைத்திய சாலைகள் கட்ட உபயோகிப்பது பிரயோசனமாக இருக்கும்!

இப்படிப் பேசி வருகிறார் ஒருவர்! மேலும் கருத்தைக் கண்டதும் நம்மவர் யாரேனும் இப்படிப் பேசியிருப்பர் என்று தோழர்கள் சர்வ சாதாரணமாக கருதிவிட வேண்டாம்! பேசியவர் மிகவும் உயர்ந்தவர்! 'உயர்ந்தவர்' என்பதால் சமயத்திற்குத் தக்கபடி பேசும் பண்டித நேரு பேச்சோ என்றும் நினைத்துவிட வேண்டாம்!

பேசி வருபவருக்கு சமுதாயத்திலே நல்ல மதிப்பு. மதிப்பா...அல்ல. பக்தி உண்டு! யார் இவர்? கூறிவிட்டால் ஆச்சரியம் கொள்வோம்! 'இவரா இப்படிப் பேசுகிறார்' என்று மூக்கிலே விரலை வைக்கச் செய்யும்! ஆமாம்! மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார்தான் மேற்கண்ட முறையிலே பேசி வருகிறார்! இந்த மதத் தலைவர்தான் முன்பு இல்லாத முறையிலே போகும் இடமெல்லாம் இப்படி உபந்நியாசம் செய்து வருகிறார்! திரிசடையனின் திவ்வியப் பிரபந்தம் பாடிய 'தவப் பெருந்திருக்கள்' இப்போது தனது இருப்பிடம்விட்டு எங்கோ சென்று அர்த்தமில்லா உலகிலே அக்கரைகொண்டு பணியாற்றி வருகின்றனர்!

காலம் அவர்களை எங்கு கொண்டு வந்திருக்கிறது பாருங்கள்.

'மெய்த் தொண்டரே ஐயனைத் தரிசிக்க வேண்டும்!'

'அது முடியாத காரியம் அப்பனே! இப்போதுதான் ஐயன் நிஷ்டையில் ஆழ்ந்துள்ளார்கள்!' இப்படிப் பதிலுரைப்பான் அடிகளாரின் தொண்டன். தரிசிக்க விரும்பியவனோ ஒரு பாமரனாக இருப்பான்! எனவே அப்படியே திரும்பி விடுவான்!

'மும்மலம்' அடக்கியோர்களல்லவா அடிகள்! அவரைச் சந்திப்பதற்கு 'அருகதை' யுடையவர்கள் அல்லவா வேண்டும்! ஆதீனத்தரசின் அனுஷ்டானம் கிடைப்பது சாமான்யமா என்ன!

புலித்தோல் ஆசனத்தில் பொன் நிறத்தையும் தோற்கடிக்கும் பூதவுடலைத் தாங்கியவாறு அமர்ந்திருப்பார்! நீண்ட தாடி! கழுத்திலே உதிராட்ச மாலை—கையிலும் ஒன்று! இடது கையிலே உண்டி! கவலையற்ற முகம். கனஜோராக இருக்கும் பார்ப்பதற்கு. அவருக்கு அடுத்து சரிகைத் 'தலைப்பாய்கள்' ஆமாம் அருகதை உள்ளவர்கள் சாஷ்டாங்க மரியாதைகளோடு பக்தியில் மேலிட்டவாறு 'அடிகளை' உற்று நோக்கி இருப்பர்! நவநாகரீகத்தோடு நல்ல நிலையிலே இருக்கும் நாரீமணிகளும் 'பாக்கியம்' பெற்றோம் என்று பரவசத்தோடு இருப்பர்!

அடிகளும் காய்த்த பாலைக் கடகடவெனக் குடித்துவிட்டு, வந்திருப்பவன் வட்டிக் கடைக்காரனாக இருந்தாலும் சரி, வாட்டும் வணிகனாக இருந்தாலும் சரி, கொள்ளை லாபமடிக்கும் கனவானாக இருந்தாலும் சரி, யாக்கையின் நிலையாமை'பற்றி, 'இன்றைக் கிருப்பரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ முடியவில்லை ஐயா" என்னும் தத்துவம் பற்றிய விளக்கத்தையோ கூறிக் கொண்டிருப்பார்! 'ஆண்டவன் சக்தி அளக்கக் கூடியனவோ! ஆடுகின்றவனும் அவன்! ஆட்டு விக்கின்றவனும் அவன்! அவன் பாதம் பணிவோர்க்கே அருளை வழங்குவான்! மறுமைக்கு இம்மையே வழியாக இருக்கிறது' எனவே இம்மையில் அன்பு செலுத்தி —பக்தி செலுத்தி அவனிடம் இறைஞ்சி நமது பாபக் கறைகளைப் போக்கிக் கொண்டால்தான் மறுமையில் ஆனந்தம் அடையலாம்...' இப்படி விளக்கம் வளர்ந்து கொண்டே போகும்!

சல்லாப வாசிகளோ தாங்கள் செய்வது அவ்வளவு அநியாயமாக இருந்தாலும் சரி 'சுவாமிகளின்' சொற்படி நடப்பதுபோலவே தலையாட்டி திருப்பிம் பத்தின் பேச்சிற்கு தலையாட்டிக் கொண்டே ரசிப்பர்! பேச்சு முடியும்! 'பெரியோர்கள்' எழுந்திருப்பர்! காணிக்கை ஆயிரக் கணக்கிலோ பத்து ஆயிரக் கணக்கிலோ செலுத்திவிட்டு வணக்கம் புரிவர்! 'நலம்உண்டாவதாக' என்று நாமதாரி முணங்கியவாறே திருநீற்றை அள்ளி கையில் கொடுப்பான். பக்தியோடு பெற்றுத் திரும்புவர் பெருமக்கள்! என் அப்பனின் அடியானோ கொடுத்த பணத்தைப் பையில் போட்டு இறுக்கிக் கொள்வான் இடுப்பிலே!

நிலைமை இப்படித்தான் இருந்தது முன்பு! சாதாரண மக்கள் கோவிலுக்குள் கூட நுழைய முடியாமலிருந்த போது எங்கே முக்தி பெற்றோர்களைப் பார்க்க முடியும்! மடாதிபதியோ தனக்குக் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு —கொஞ்சிக் கொண்டிருப்பான் கட்டழகியின் பின்னே!

கண்ணே! கனிரசமே!!

'பகலெல்லாம் உபதேசம்! இரவிலே கன்னியிடம் காதல் கீதம்!' இப்படிக் கூறிவிட்டு 'களுக்' கென்று சிரிப்பாள்!

'அது எனக்கல்லவே! ஊருக்குத் தானே! வா இப்படி!' என்று பற்றி இழுப்பான் மூவாசையை வென்றவன்!

எப்போதும் இப்படியா!

தாகம் பொறுக்குதில்லையே!

இம்...!

'.......'

இரவிலே காமக் குளத்திலே நீராடி விட்டு பகலிலே பக்தி வேஷம் போடுவான். இப்படி எத்தனையோ பேர்—எத்தனையோ ரகங்களில் உண்டு.

உலகம் இதையா கவனித்துக் கொண்டிருக்கும்! பகவானின் திருக்கடாட்சம் பெற்றவர்களல்லவா அவர்கள்! வெளியில் வருவதே கிடையாது! வெளியில் என்ன வேலை அவர்களுக்கு! மக்களைப் பற்றி மடத்தலைவருக்கு என்ன கவலை!

தப்பித்தவறி வெளியேற நேரிட்டாலும் தங்கத் தேரிலே 'திருமேனியன்' அமர்ந்திருக்க மடத்து மெய்யன்பர்கள் அவனைத் தூக்கிக் கொண்டுவர, தனது ஆள் அம்பு பரிவாரங்களோடு வருவான், மக்களெல்லாம் 'தீராத வினையைத் தீர்க்கும் வடிவேலன்' என்றே அவனைப் போற்றி திரளாகக்கூடி தரிசித்துப் போவர். இந்நிலையில் அவனுக்கென்ன வெளியாரைப் பற்றிய அக்கரை!

தானுண்டு தன் சேஷ்டைகள் உண்டு என்றே அடைந்து கிடப்பர்!

அடைந்து கிடந்தவர்கள் போலவா இன்றுள்ள 'மடத் தலைவர்கள்' இருக்கின்றனர். அன்றுள்ளவர்களின்போக்கா இன்றுள்ள ஸ்ரீலஸ்ரீக்களிடம் தென்படுகிறது. இல்லையே!

அதோ குன்றக்குடி அடிகளார் எங்கெங்கெல்லாமோ சுற்றி அலைகிறார் பாருங்கள்! சென்னையிலிருக்கிறார், மறுநாள் திருநெல்வேலி வருகிறார், சேலத்திலிருக்கிறார் மறுநாள் கோவை செல்கிறார்! ஆம் அரசியல் தலைவர்கள் போல் இன்று மடத் தலைவர் பவனிவருகிறார் அங்கும்—இங்கும்.

அதோடு நின்றுவிடுகிறதா அவர்கள் போக்கு, இல்லை! பேச்சு பகுத்தறிவு வாடையை உடையதாக இருக்கிறது, 'மதத்திற்காக மக்கள் இல்லை' என்று கூறுகிறார்! அதுமட்டுமல்ல 'பழைய போக்கு செல்லாது எனவே காலத்திற்கேற்றவாறு மதத்தை மாற்றியமைக்கப் போகிறேன் என்று வேறு பேசுகிறார்! சுயமரியாதைக்காரர்கள்—சமுதாய சீர்திருத்தக்காரர்களாகிய நாம் எந்த மதத்தை எக்காரணங்களுக்காக கண்டித்தோமோ அத்துறையிலே பணியாற்ற ஆசைப்படுகிறார்! இதோ ஒரு சம்பவம் பாருங்கள்!

சமீபத்தில் குன்றக்குடி அடிகளார் நாகர்கோவில் சுசீந்திரம் என்னும் இடத்தில் உள்ள ஒரு அரிஜன விடுதியைப் பார்க்கச் சென்றிருக்கிறார்! அங்குள்ள அரிஜனங்களோடும் அளவளாவி யிருக்கிறார்!

'நீ இனி என்ன செய்யப் போகிறாய்' என்று அடிகள், ஒரு அரிஜனப் பெண்ணிடம் கேட்டிருக்கிறார், அந்தப் பெண்மணி நாணி பதில் பேசாமல் இருந்திருக்கிறார். அடிகளாரோ விடுவதாக இல்லை!

சும்மாசொல்! பயப்படாதே! என்று மீண்டும் கேட்டிருக்கிறார்!

அடிகளார் மறுபடியும் வற்புறுத்தவே அப்பெண்மணி 'நான் அரிஜன முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவேன். என்று கூறியிருக்கிறார்'

உடனே அடிகளார் அரிசனம் என்று நீங்கள் பேசக்கூடாது, நாட்டில் ஜாதி பேதமே இருக்கக் கூடாது. இப்படி உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளக் கூடாது. என்று பகுத்தறிவு பிரச்சாரம் செய்திருக்கிறார்!

இந்த நிலைமையோடு இன்றைய போக்கு நின்றுவிடவில்லை. சேரும் பணத்தைக் கொண்டு நல்ல காரியங்களைச் செய்யவும் முனைந்திருக்கின்றனர்.

திருமலை—திருப்பதி தேவஸ்தானம் 50 லட்சம் ரூபாய்வரை கல்விக் கூடத்திற்காக செலவழிக்க முற்பட்டிருக்கிறது.

சர்க்கார் கடனுக்குக்கூட மடத் தலைவர்கள் தேவஸ்தானம் பணத்தை அளிக்க முன்வந்து விட்டனர்.

இன்னும் புலவர்களைப் பாராட்டல், திருக்குறளைகோவில்களில் சலவைக்கற்களில் பொறித்தல், அரசியல்நிகழ்ச்சிகளில் பங்கேற்றுக் கொள்ளுதல், கல்லூரிகளில் தமிழ்ப் பிரச்சாரம் செய்தல் போன்ற வேலைகளை யெல்லாம் குந்தியிருந்த மதத் தலைவர்கள் இன்று குதித்தெழுந்து செய்கின்றனர்.

எத்தகைய மாற்றம் இது!

குன்றக்குடியார் மட்டுமா பின்பற்றுகிறார்! காசிவாசி அருள்நந்தித்தம்பிரான்! எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்! என்ன காரணம் இதற்கு! யாரால் ஏற்பட்டது! சில ஆண்டுகளுக்கு முன் உள்ள நிலைமையையும் இப்போது இருக்கும் நடைமுறைகளையும் ஒரு முறை நிதானித்துவிட்டு கூறுங்கள் யார் இதற்குக் காரணம் என்று!

நாம்தானே — திராவிட இயக்கத்தவர் தானே இதற்கெல்லாம் காரணம்! மறுக்க முடியுமா யாராவது! இருபத்தைந்து ஆண்டுக் காலமாக நாம் கிளப்பிய ஒலி இன்று அவர்கள் காதிலே விழ ஆரம்பித்து விட்டது. அதன் விளைவு தானே இது!

ஆமாம் தோழர்களே! நாம் பட்ட பாடு—தாங்கிய கொடுமை — பட்ட அவஸ்தைகள் வீண் போகவில்லை!

பாலைவனத்தில் பசுஞ்சோலை உண்டாகாது என்று அப்போது எல்லோரும் கருதியது போலவே மதப்போக்கிலே மாற்றம் ஏற்படும் என்பதாக நமக்குத் தென்படவே இல்லை! இருள் ஆழ்ந்த உலகம்! இடையிலே நாம்! இப்படித் தான் பணியாற்றினோம்.

மதத்தலைவர்கள்தான் நம்மை வெறிகொண்டு நிந்தித்தனர் என்றால் அரசியல் கட்சிகள்கூடநம்மை கண்டிப்பதில்அவர்களைவிட ஒருபடி மேலேயே சென்று விட்டனர். காங்கிரஸ் கட்சியினர் கண்டபடி திட்டியதோடல்லாமல் மதத்தை எதிர்த்துப் பேசியதற்காக சிறைத் தண்டனைகளையும், தடியடிகளையும் பரிசாகத் தந்தனர், தந்து வருகின்றனர். அருமைக் கம்யூனிஸ்ட்டுகளோ மதவிஷயத்தில் மார்க்ஸை விட்டுவிட்டு கம்பராமாயணக் காலட்சேபம் செய்ததோடு விடாது நம்மை 'பச்சைச் சாதி வெறியர்கள்' பார்ப்பன விரோதிகள் என்றெல்லாம் தமது வசவுப் புராணத்தை ஆரம்பித்து —வருகிறது.

தென்னாட்டிலேயே நாம்தான்—நமது இயக்கம் தான்—உறுதியாக—இன்னல்களுக்கிடையேமதவெறியைக்கண்டித்து மதப்போக்கைச் சாடி, மத ஓடத்தில் ஏறிய மாந்தரை மீட்டு வருகிறோம். 1952-ல் தொடங்கிய சீர்திருத்தப் பிரச்சாரம் இன்னும் நின்றுவிடவில்லை. வளர்ந்தே வருகிறது. பலவித அடக்குமுறைகளினூடே விடாது செய்து வருகிறோம்!

நமதுபணி—நமது உழைப்பு—நமது தியாகம்—வீண்போகவில்லை, அதோ குன்றக்குடி அடிகளார் தமது பேச்சிலே —செயலிலே புதுப்பாதை வகுக்கிறார்! வெள்ளம்போல் மக்கள் கூட்டம் நம் பக்கம்! போதாதா நமது வெற்றிக்கு!

ஆமாம்! பாலைவனம் பலன்தருகிறது!

செய்திகள்

இலங்கை

பாராட்டுக் கூட்டம்

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக கொழும்புக் கிளையின் முன்னாள் செயலாளர் தோழர் பி. தம்பித்துரை அவர்கள் தாயகம் செல்வதை முன்னிட்டு, கொழும்பு கிளையின் கழகப் பணிமனையில் திரு ஏ. எஸ். மணவைத் தம்பி அவர்கள் தலைமையில் கடந்த ஞாயிறு அன்று பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் எம் ஐ இராசமணி அவர்கள் கழகத்தின் சார்பில் பாராட்டு மடலை வாசித்தளித்தார். பிறகு தோழர் பி. தம்பித்துரை அவர்களின் சேவையை பாராட்டி இ. தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. அ தி மணி, கிராண்ட்பாஸ் கிளை, பொரல்ல கிளை அண்ணா பகுத்தறிவு மன்றம். முத்தமிழ் மன்றம் ஆகிய மன்றங்களின் சார்பில் பலர் பேசினார்கள்.

தோழர் சி. தலுவத்த பேசுகையில் குறிப்பிட்டார், நண்பர் தம்பித்துரை தாயகம் சென்று அறிஞர் அண்ணாவிடம் இலங்கையில் இயக்க வளர்ச்சிகளை குறிப்பிட வேண்டும். வாடி வதங்கி சோகக் காட்சியோடு காணப்படும் இலங்கைவாழ் திராவிடர் துயரை திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தீர்க்கமுடியும் என்று அவர் கூறினார், இறுதியில் திரு. சி. தம்பிதுரை அவர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில்குறிப்பிட்டதாவது:

அன்புள்ள தோழர்களுக்கு நான் தெரிவிக்க வேண்டியது நிரம்ப உண்டு! இலங்கையில் நமதியக்கம் ஆரம்பத்தில் நாம் இருந்த நிலைக்கும் இன்று நாம் வளர்ந்திருக்கும் நிலைக்கும் என்ன காரணம் என்பதை கவனித்தால், நம்மிடையே உள்ள ஒற்றுமையும் கட்டுப்பாடும், நாம் நமது லட்சியத்திலே கொண்ட பற்றும்தான் காரணம் என்பதை நாம் உணர வேண்டும். இந்த நாட்டில் இ தி மு கழக வளர்ச்சிக்கு உங்களின் ஒத்துழைப்பைத் தந்து அதனது வளர்ச்சிக்கு பாடுபட வேண்டியது என்பதுதான் எனது வேண்டுகோள் எனக் கூறினார்.

இறுதியாக துணைச் செயலாளர் தோழர் வி, எஸ் முருகன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

தமிழகத்தில் தோழரின் முகவரி:—

பி. தம்பிதுரை
அன்னவாசல்
புதுக்கோட்டை டிவிஷன்
திருச்சி மாவட்டம்

*

பம்பாய்

தெ. இ. ஆதிதிராவிட மகாசன சங்கம்

இம்மாதம் 7-ந் தேதி இரவு 7—30 மணிக்கு பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்க பதினைந்தாம் ஆண்டுப் பேரவைக் கூட்டம் தாராவியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

கௌரவச் செயலாளர் திரு. ந. ஐ. சுப்பையா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சங்கத் தலைவர் திரு. ஒ. த. அய்யாசாமி அவர்கள் தலைமையுரையாற்றினார். அலுவலகச் செயலாளர் திரு. ந. சிவபாண்டியனால் சமர்ப்பிக்கப்பட்ட பதினைந்தாம் துண்டறிக்கையையும் வரவுச் செலவு கணக்குகளையும் இருப்பு பொருப்பு பட்டியல்களையும் பரிசிலனைக்குப் பின் ஒப்புக் கொள்ளப்பட்டன,

நடப்பு ஆண்டிற்கு திருவாளர்களான கு. ப. வேலு மேஸ்திரியார் அவர்களை தலைவராகவும், ந. ஐ. சுப்பையா அவர்களை துணைத்தலைவராகவும், ப.ச. அருணாசலம், பே. சு. பெருமாள் ஆகியவர்களை கௌரவச் செயலாளராகவும் நா. து. கணபதி அவர்களை பொருளாளராகவும் மற்றும் நிர்வாக கழக உறுப்பினர்களையும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டன.

சங்க அமைப்பு விதிமுறை எண் ஐம்பதில் அவசியமானத் திருத்தங்கள் செய்ய அனுமதிக்கப்பட்டதோடு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினராக நியமனம் பெற்ற திரு ஜே. சிவசண்முகம் அவர்களை வாழ்த்தி தீர்மானிக்கப்பட்டன.

பாண்டுப் தி. மு. கழகம்

25-8-55 காலை 9 மணிக்கு தோழர் தாமஸ் அவர்கள் தலைமையில் கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. நவம்பர் மாதம் இரண்டாவது வாரம் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் தாயகத்திலிருந்து புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களையும் தோழர் சம்பத் அவர்களையும் சொற்பொழிவாளர்களாக அழைப்பதென முடிவு செய்ததோடு கோவா விடுதலைப் போரில் உயிர் நீத்த தோழர்கட்கும் தோழர் கோகைராசன் மரணத்திற்கும் தோழர் விசுவநாதன் குழந்தை மரணத்திற்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பொய்சேர் தி. மு. க.

பொய்சேர் தி. மு. கழக தேர்தல் கூட்டம் 15—8—55 திங்கள் மாலை 6 மணியளவில் தோழர் கே எ முத்தையா இல்லத்தில் தி. மு க. சட்டதிட்ட செயலாளர் தோழர் த மு. பொற்கோ தலைமையில் கூடியது.

தோழர் எம் எஸ். சண்முகம், திராவிடப் பண் பாடினார், தோழர் எம். எஸ். இராசு அவர்களால் முன் கூட்ட நிகழ்ச்சி வாசித்துக் காட்டப்பட்டு திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோழர்கள் க, ஆ. இராமசுவாமி வி எஸ், பொன்னையா, எஸ் எஸ். முத்தையா, து. சே. அருணாசலம், சி. இரா. அதிவீரன், இரா மா. சண்முகராசன், பசுபதி, ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நிர்வாகிகளைப் பற்றியும், கழக வளர்ச்சியைக் குறித்தும் கருத்துரை நல்கினர்.

செயலாளர் சி. இரா. அதிவீரன், துணைச் செயலாளர் எம். இ. சேகர், பொருளாளர் எம். தருமராசு,

பொதுக்குழு பிரதிநிதிகள்: தோழர் ஆ. குணசேகரன், கே. எஸ். சுப்பையா செயற்குழு உறுப்பினர்கள்: தனசீலன், து. சே. அருணாசலம், கே ஆர். பொன்னுசாமி, க. ப. முத்தையா, கே. எஸ், எஸ். இராசு, கே. ஏ. முத்தையா, கே. நல்லகண்ணு, எஸ். கிருஷ்ணன், டி. எம். கந்தசுவாமி, கே. ஏ. கணபதி. பி. பி. மூக்கையா, எம். எஸ். முத்து.

•

இராசிபாளையம்

கோவா போராட்டத்தில் கலந்து கொண்ட அறப்போர்வீரர்களை போர்த்துகீசிய சர்க்கார் மிருகத்தனமாக சுட்டுத் தள்ளியதை கண்டிக்க இராசிபாளையம் பீடித் தொழிலாளர்களும் பொது மக்களும் திரண்டு பெரும் ஊர்வலமாக 18—8—55 மாலை 5 மணிக்கு புறப்பட்டு பிள்ளையார் கோயில் மைதானத்தை அடைந்தனர். ஊர்வலத்தில் தி. மு. கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் சோஷலிஸ்ட் ஆகிய கட்சி கொடிகள் தாங்கிவரப்பட்டன, மற்றும் இவ்வூர் மாணவர் மன்றமும் கலந்துகொண்டது சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன; சமீபத்தில் கண்டிராத பிரம்மாண்டமான அளவிற்கு பிள்ளையார் கோயில் மைதானத்தில் ஜனத்திரள் கூடி இருந்தது. பாரதி பீடி மானேஜர் கே. கே. நம்பியார் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். திருவாளர்கள் அ அங்கத்தேவர் ஆர். பெருமாள், இரா ப. அய்யாசாமி ஆகியோர் கோவா போராட்டம் பற்றி விரிவாக பேசினார்கள். கோவா வீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் பொருட்டு 1 நிமிஷம் மவுனமாக இருக்க இக்கூட்டம் முடிவுற்றது.

மயிலை (44-வது வட்டம்)

21—8—55 ஞாயிறு காலை 10 மணிக்கு கழகப் பணி மனையில் தோழர் எ. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் செயற்குழு கூட்டம்நடைபெற்றது கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச்செயலாளராக என். வி நடராசன் அவர்கள் நியமிக்கப்பட்டதை இச்செயற்குழு முழுமனதுடன் வரவேற்பதுடன் நியமித்தமைக்காக பொதுச் செயலாளர் அவர்கட்கு இக்குழு தனது பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

கோவா விடுதலைப் போரில் ஈடுபட்டு எல்லைப் பிரதேசங்களில் நுழையும் போராட்ட வீரர்களை போர்த்துகீசிய ஏகாதிபத்தியம் சுட்டு வீழ்த்தியதை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன் அறப்போரில் ஈடுபட்டு உயிர் நீத்த வீரர்களுக்கு தனது வீரவணக்கத்தையும் காயமுற்று வருந்துவோருக்கு ஆழ்ந்த பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழக 6 வது ஆண்டு விழாவை செப்டம்பர் மாதம் 9-ந் தேதி நடத்துவதெனவும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

மதுரை நகர் தி. மா. மு. க.

இக்கழகம் 21-8-55 அன்று கூடியது திரு சுப்பையா தலைமையில் திரு மா. பாண்டியன் செயலாளராகவும், திருவாளர்கள் சுந்தரம், தங்கப்பாண்டியன் ஆகியோர் துணைச்செயலாளர்களாகவும் திரு. தேனி நாதன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், மேலும் பலர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு புதுச் செயற்குழு அமைக்கப்பட்டது. பின் கோவாப் படுகொலையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயலாளர் நன்றி நவிலக் கூட்டம் முடிந்தது.

கம்பம் கூட்டத்தில் அறிஞர் அண்ணா

24—8—55—ந் தேதி மாலை 4-30 மணிக்கு கம்பம் வ. உ. சி. மைதானத்தில் தோழர் பி. சிக்கையன் தலைமையில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் தோழர் புனுகு நடராசன் நாட்டுப் பண்பாடினார். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் மதுரை எஸ். முத்து, பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு கம்பம் தி மு. க. சார்பில் தோழர் டி. நடராசன் அவர்களால் ஒரு வரவேற்பும், வண்டிப்பெரியார் தி. மு. க. சார்பில் தோழர் கே. எ. கலையழகன் அவர்களால் ஒரு வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பட்டது.

கம்பம் சுற்று வட்டாரக் கிராமத் தோழர்களால் அண்ணா அவர்கட்கு கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர் அண்ணா அவர்கள் இன்றைய அரசியல நிலை பற்றியும் தி. மு. க. வின் கோட்பாடுகள் பற்றியும் சுமார் ஒரு மணி நேரம் பேசினார், டிசம்பர் மாத மத்தியில் திருச்சியில் நடைபெறப் போகும் மாநில மாநாட்டுக்கு ஏராளமான தோழர்கள் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மாநில மாநாட்டு நிதிக்காக கம்பம் தி. மு. க. சார்பில் தோழர் எஸ். முத்து அவர்களிடம் 150 ரூபாய் நன்கொடையாக அளிக்கப்பட்டது. செயலாளர் தோழர் பாலகிருட்டினன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

இதுவரை கம்பம் நகரமே கண்டிராத அளவுக்கு ரோடின் இருபக்கங்களிலும் அண்ணா அவர்களை வரவேற்க ஆயிரக் கணக்கான மக்கள் நின்றிருந்ததும் சொற்பொழிவைக் கேட்க சாரல் மழையையும் தாங்கிக் கொண்டு பல்லாயிரக் கணக்கில் கூடி யிருந்ததும் குறிப்பிடத் தக்கது. கம்பம் தி. மு. க. தோழர்களால் ரோடின் நெடுகிலும் ஒரு மைல் நீளத்திற்கு வரவேற்பு வளைவுகளாலும், தோரணங்களாலும் பந்தல்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

புதுவை

கோவிந்தசாலை தி. மு. க. தேர்தல் கூட்டம் 4—8—55 மாலை 7 மணிக்கு தோழர் ச. சிவப்பிரகாசம் முன்னிலையில் நடைபெற்றது தோழர் வீ. செல்வர்க்கரசு, செயலாளராகவும், இரா. கண்ணபன் துணைச்செயலாளராகவும், வீ. சிவராம் பொருளாளராகவும் நாகசாமிராச் மாவட்டப் பிரதிநிதியாகவும் செயற்குழுவினர்: தெ. சிவராஜு, இரா. தர்மராஜு, ச. பாலன், த. செயராம், திரு தேவிதாசன், நாக. சாமிராஜு, இரா சிவானந்தம், கி. பொயில் இவர்களை உள்ளடக்கிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண் சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்



தயாரிப்பவர் :
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம்ரோடு
தஞ்சாவூர்

*

சந்த்ராம் இல்லத்தில் முதல் நாள் இரவு ஹேத்ராம் என்பவர் என்னைச் சந்தித்து அவர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றது வரை கடந்த வாரக் கட்டுரையில் கண்டோம்.

முன்பே அறிவித்தபடி நண்பர் ஹேத்ராம், சந்த்ராம் அய்யாவின் இரண்டாவது மகனர். அவரைப்பற்றிச் சிறிதாவது கூற வேண்டியது எனது கடமையாகும். ஏனெனில் அவர்தான் எனக்குப் பஞ்சாபில் நிழலென நின்று பேருதவி யளித்ததோடு, பஞ்சாப் மக்களிடம் என்னை உரையாடச்செய்து அவர்களது பழக்க வழக்கங்களைக் கண் கூடாகக் கண்டறியச் செய்தார்.

ஹேத்ராம் ஒரு பெரிய வணிகர். நிலப் பிரபு, தனவந்தர்—ஏன், ஒரு ஜமீன்தார் என்று கூடச் சொல்லலாம்! ஆனல் அவரிடம் பணத்திமிர் மருந்திற்குக் கூட காணக் கிடைக்க வில்லை. சாந்தம், பேரன்பு, இன்முகம், பம்பரம் போல் சுற்றி அலையும் உழைப்பு, கோபக்குறியே காணப்படாத கனிவுப் பேச்சு, நிதானம், நிம்மதி, ஆகிய பண்புகளே அவரிடம் மண்டிக் கிடப்பதைக் கண்டு வியந்தேன்! அவர் எப்போதும் நல்ல ஆடைகளை உடுத்துகிறர் காலில் 'கிரீச்—கிரீச்' என்று ஒலி கிளப்பும் பஞ்சாப் 'ஷூஸ்' பைசாமா, பஞ்சாப் 'லாங்' ஷெர்வாணிகோட், தலையில் அலங்காரமான, முன் பக்கம் குஞ்சம்—விரித்த விசிறிபோல் ஆட, பின் பக்கம் குஞ்சம் தொங்கி ஆட, கட்டி விட்டத் தலைப்பாகை, வழக்கம் போல் காலியாக விளங்கும் நெற்றி, புருவங்களில் லேசாகத் தீட்டப் பட்டக் கண்மை (ஆம்! ஆண்கள் கூட பெரியவர், சிறியவர் என்ற பேதமில்லாது மையிட்டுக் கொள்கிறர்கள்) சைகிள் சவாரி, ஆகியவைகளோடு காட்சி யளிப்பவரே ஹேத்ராம் ஜீ! அவர் வயதில் இளையவரன்று!

செழிப்பான விளை நிலங்களில், கொழித் தெடுக்கும் நவதானிய மணிகளை காஷ்மீர், மத்திய ஆசியா. (Central Asia) முதலிய பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்து வாணிபஞ் செய்கிறர்.

இத்தகையப் பண்புகள் நிறைந்த ஒருவர். மிக மிகச் சாமானியனுகிய எனக்கு, ஒரு உற்றத்துணைவராகவும் (Guide), ஒரு மூட்டைத் தூக்கியாகவும் (Porter), பணியாற்றினர் என்ருல் அவரது எளிய உள்ளத்தை, அடக்கக் கடலை தோழமையின் பண்பை, எவ்வெழுத்துகளால் எழுதி எனது போற்றுதலைத் தெரிவித்துக் கொள்வது? என்ன கைம்மாறு தான் என்னல் செய்யக்கூடும்?

அவரிடமிருந்து நான் பலப் பல சமயங்களில், 'அய்யா தாங்கள் வயதிலும், அனுபவத்திலும், அந்தஸ்த்திலும் எனது தந்தை அன்னவர்! தாங்கள் என் பொருட்டு இவ்வளவு சிரமங்கள் ஏற்கக் கூடாது! யான் சிறுவன், வாலிபன் யானே எளிதில் செய்து கொள்ளும் பணிகளைக்கூடத் தாங்களே ஏற்றுக் கொள்கிறீர்கள். எனக்கு மிக மிக வெட்கமாகவும் உள்ளது' என்று போராடி"ப் பார்த்தேன்!

ஊஹூம்! முடியாது! It is my duty to look after you here. Indeed you deserve more as we find every virtue in you. You are really very loving, liberal and kind hearted. Persons coming in contact with you find all sorts of pleasurein you. So do I! —எனக்கு அவர் பணி செய்வது அவரது கடமையாம், அவர் செய்த பணிபோதாதாம் எனக்கு இன்னும் எவ்வளவு செய்தாலும் தகுமாம். நான் அன்பானவனும். தாராள சிந்தையுடையவனும். கனிவு உள்ளம் பூண்டவனும். யார் என்னைச் சந்தித்தாலும் எல்லா வகை இன்பங்களையும் என்னிடங் கண்டு மகிழ்கிறர்களாம். அவ்வண்ணமே ஹேத்ராமும் என்னிடம் அன்பு கொண்டாடுகிறராம்....என்றவாரெல்லாம் கூறினர்.

பொடியனுக்கா சுமக்க முடியாத இவ்வளவு பொற்பதக்கங்களும், புகழ் மாலைகளும்?—உண்மையிலேயே நான் மேற்கண்ட வருணனைகளுக் கெல்லாம் ஏற்றவன் தானு என்று அன்று கொண்ட சந்தேகம் இன்றளவுமிருந்து வருகிறது. அது என்றைக்குந்தானிருக்கும்! புகழுடையவா பிறந்தோம்? இல்லை! நமக்குற்ற சக்திகளைக் கொண்டு நற் பணியாற்ற வேண்டும்! உண்மைக்கு உழைக்க வேண்டும்! புகழ்ச்சிக்கும்—இகழ்ச்சிக்கும் ஆட்படக் கூடவே கூடாது நம் கடன் பணி செய்து கிடப்பதே! அப்பணி புகழ்ச்சி நாடியுமல்ல! இகழ்ச்சியுறு வண்ணமுமல்ல! மகிழ்ச்சி கொள்ளும் வண்ணமே பணியாற்ற வேண்டும். மகிழ்ச்சி நம்மை கை தூக்கி விடும். புகழ்ச்சி நம் வெற்றிப் பாதைகளில் வழுக்கி விழச் செய்யும். இகழ்ச்சி நம்மைத் திருத்தி நேர்வழி நடக்கச் செய்யும்.—என்பன போன்ற எனது எண்ணங்களுக்கு ஹேத்ராம் அவர்களே காரண கர்த்தா ஆவார்.

ஹேத்ரரம் என்னை அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றதின் நோக்கம்? அவரது இல்லம் சந்த்ராம் இல்லத்தைக் காணினும் சற்று வசதியுள்ளது. இரண்டாவது என்னிடத்தில் ஹேத்ராம், கண்டறிந்த ஆங்கிலத்தில் உரையாடும் வண்மை, ஆற்றல் மூன்ருவது அவர் தம் குழந்தைகள் கல்லூரியிலும், உயர்தரப் பள்ளிகளிலும் வாசித்துக் கொண்டிருக்கும் பருவத்தில், எனது அனுபவங்களையும், ஆர்வங்களையும், ஆங்கிலம் எழுதும், பேசும், படிக்கும், போக்கினையும் கண்டால் அவர்களும் நன்மை அடைவர்—என்பன போன்ற காரணங்களோடு, சந்த்ராம் அவர்களின் விருந்தினருகிய என்னை, ஹேத்ராமும் தமது விருந்தினருக வைத்துக் கொள்ள வேண்டு மென்ற எண்ணத் தோற்றமே, அவர் என்னிடம் நேசங் காட்டியது.

இரவு மணி ஒன்பது. ஹேத்ராம், அவரது மனைவி, மூத்த மகள் சரளா (பி.

ஏ. வகுப்பு மாணவி), வினய்குமார் (மெட்ரிகுலேஷன் மாணவன்), சூஷ்மா (மூன்ரும் படிவ மாணவி, ஆகியவர்கள் மத்தியில் நான் உட்காரப் பேச்சைத் துவக்கினேம்.

என்னை "அளக்க"ச் சொன்னர்கள்! அளந்தேன்! அளந்தேன்!! அவர்கள் வாய் பிளக்க. கைக் கடிகார முட்கள் இரண்டும் இணைந்து செங்குத்தாக நிற்கும் வரை அளந்து தீர்த்தேன்! ஒருபடிபால்கொள்ளும் செம்பு நிறைய பால் வைத்துக் கொண்டு, ஒரு டம்ளரில் அளந்து கொடுத்தார்கள் ஒன்று.........! இரண்டு.........! போதும்! போதும்!! என்வயிறென்ன பால் அடைத்து வைக்கும் 'பேரலா' நாங்கள் எங்கள் பக்கங்களில் ஒரு டம்ளருக்கு மேலே குடிக்க மாட்டோம் என்றேன்.

உங்கள் பக்கம் பாலுக்குப் பஞ்சமென்ற அர்த்தமே யொழிய பருக முடியாதென்று அருத்தமாகாது என்ருர் ஹேத்ராம்!

"திருவேடம்"

என் வயிற்றிற்கு ஆகாது; பழக்க மில்லாமல் எப்படி குடிப்பது? என்று வாதாடினேன்.

சும்மா குடி! நீ இன்றே நாளையோ உன் ஊருக்கு போய் விடுவாய் அப்போது கேட்கவா போகிறேம்! குடி என்ருர்கள்.

சாதாரண பால் அல்ல அது? நம் பக்கங்களில் சீமை எருமை என்கிறேமே அந்த யானை போன்ற கட்டுடலோடு கூடிய கருமையான, வாளிப்பமான எருமை மாட்டின் பால் பக்குவமாகக் காய்ச்சிய பால் சர்க்கரையோடு, பாதாம் பருப்பு, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, பச்சைச் சோம்பு, லேசாக இஞ்சி, லவங்கம், ஏலக்காய், இன்னும் என்னென்னவோ கூறினர். அத்தனை வாசனைத் திரவியங்களையும் போட்டு செம்பு நிறைய வைத்துக் கொண்டு குடி குடி என்ருர் ஹேத்ராம்.

ஒரு ஆளிற்கு ஒரு செம்பு பால் வீதம் நாங்களெல்லாம்குடிப்போம்நீயும்அவ்வாறே குடிக்க வேண்டும். இப்பாலை குடிப்பதால் குளிரால் பாதிக்கக் கூடிய மூக்கடைப்பு, தலைவலி, மார்சளிக்கட்டு, குளிர் ஜுரம், குளிரால் முகம் நிறம் மாறுதல் எதுவும் இருக்காது என்ருர்.

தொந்தரவு தாள முடியாமல் சரி!... மூன்று!....ஊம்!......நான்கு!......ஊஹூம்! அதற்கு மேல் என்னல் முடியவே முடியாது என்று தீர்த்துக் கூறி விட்டேன். ஒரு வகையில் என்னை விடாமல் விட்டார்கள். அப்பா! பிழைத்தோம்! என நினைத்துக் கொண்டேன்.

பஞ்சாபியர்களுக்கு பொதுவான ஒரு குணம் என்ன வெனின் அவர்கள் பிரியத்திற்கும் திருப்திக்குந்தான் விருந்தாளியாகியவர்கள் சாப்பிட வேண்டுமே யொழிய, நம் சக்திக் கேற்ற அளவு சாப்பிடுவதால் அவர்களுக்கு திருப்தி ஏற்படுவதில்லை.

பால் அருந்துவதனின்று நான் விடை பெற்றுக் கொண்டதும், அவர்கள் தலா ஒருவர் ஒவ்வொரு செம்பு பாலைக் குடித்தார்கள். என்ன இப்படி "மாடாட்டும்" குடிக்கிருர்களே என்று உண்மையில் வியந்தே போனேன்.

எனது வரவால் அவர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி யடைந்ததற்கு மற்றெருகாரணமும் உண்டு.

நான் அவர்களது இல்லத்தில் நுழைந்தேனே இல்லையோ, அவர்கள் வீட்டு பன்னிரு கரவல் எருமைகளில் ஒன்று இளங் கன்றை அப்போது தான் ஈன்றெடுத்தது!

பஞ்சாபில்

அதைக் கொண்டு எனது வரவு புனிதமானது என்றும் நல்ல சகுன மென்றும் என் மீது மகிழ்ச்சி கொண்டாடினர்கள்.

இன்றுகூட அவர் எழுதும் கடதங்களில் அக்கன்று ஈன்ற சம்பவத்தை கண்டெழுதிடுவார்.

அவர்களிடம் நான் என்ன பேசியிருப்பேன்? திராவிடரென்ருல் யார்? திராவிட நாடு என்பது எது? பகுத்தறிவிலும், சீர்திருத்தத்திலும், சமுதாயச் சேவையிலும் நம்முடைய பற்று, பங்கு, பணி என்ன? பெரியார் ஈ. வெ. ராமசாமியும், அறிஞர் அண்ணுவும் நமக்கு எவ்வழி காட்டுகிருர்கள்? புரட்சி மனப்பான்மையை இசை கூட்டித் தோற்றுவிக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பணி எம்மட்டு? வடவரின் சுரண்டலும், சூட்சியும் யாது? தென்னுட்டின் வடவர் எதிர்ப்புப்போர் எத்தன்மைத்தது? — என்பவைகளின் விளக்கங்களே நான் அவரிடம் பேசியவை.

ஹேத்ராமிடம் நான் பேசும் போது சந்த்ராம் அவர்களைச் சாந்தாராம்—சாந்தாராம் என்றே குறிப்பிட்டுப் பேசி வந்தேன். அப்போது அவர்தான் என்னைத் திருத்தினர். சாந்தம்: என்ருல் அமைதி என்று பொருள். சந்த்: என்ருல் முனிவர் ஞானி என்று பொருள். ஆகவே எனது சிறிய தந்தையின் பெயர் தாங்கள் குறிப்பிடுவதைப் போன்று சாந்தா—ராம் அல்ல! சந்த்—ராம் தான் சரியான உச்சரிப்பு என்று தெளிய வைத்தார். (முன்பு 'விடுதலை'யில் அவரை சாந்தாராம் என்றேதான் எழுதினேன்).

அவரது மூத்த புதல்வி சரளா. பி. ஏ., என்னிடம் சரளமாகப் பேசிற்று, ஏன் திராவிடநாடு கேட்கிறீர்கள்? இந்தியின் மீது உங்களுக்கு ஏன் அவ்வளவு வெறுப்பு? டில்லி ஆட்சியால் உங்களுக்கென்ன குறை? டில்லி ஆட்சியையும், காங்கிரஸ் கட்சியை

இரண்டாம் நாள்!

யும் எதிர்க்க உங்கள் திராவிட கழகங்களால் முடியுமா? என்பன போன்ற பற்பல சந்தேகங்களைக் கேட்டது?

இந்த எட்டாண்டு காலமாக 'திராவிடன்' வழங்கிய 'திராவிடன்' இதழ்கள் கூட அடங்காத அளவு விளக்கங்கள் பகன்றேன்.

கடைசியில் உங்களைப் போன்றே எங்கள் **மாஸ்டர் தாராசிங்கும் சீக்கிஸ்தான்** கேட்கிறார். உங்கள் கழக வரலாறுகளைக் கேட்டால், அகாலியர்கள் கட்சிதான் நினைவிற்கு வருகிறது. பெரியாரும் மாஸ்டர் தாராசிங்கும் ஒன்று என்று கூறி உரையாடினார்.

*

பேச்சு முடிந்தது, நடுஇரவு. படுக்கை. போர்த்திய 'குல்ட்'டை எடுத்து எழுந்தேன்.

பஞ்சாபில் இரண்டாம் நாள் காலை ஐந்து மணிக்குத் துவக்கினேன்.

நான் எழுவதை எதிர்பார்த்துத் தயாராகநின்ற ஹேத்ராம் 'நமஸ்தேஜீ! என்றார்.

நானும் 'நமஸ்தேஜீ!' என்று வணக்கஞ் சொல்லி நின்றேன்.

வா! கழனி வெளி பக்கமாகச் சென்று வரலாம் என்றார் ஹேத்ராம்.

கையில் ஒரு செம்பு, கத்தி, எடுத்துக் கொண்டார்.

சென்றோம். சற்று தூரம் சென்றதும் அங்கே ஒரு இருபது முப்பது எளிய வீடுகள். அங்குள்ளவர்கள் அத்தனை பேரும் பிறப்பால் ஆதிக்குடிகள். அதாவது தீண்டப்படாதவர்கள்; ஆனால் சந்த்ராமுக்கும் அவரைச் சார்ந்த குடும்பத்தவர்கட்கும் நன்றாகத் தீண்டப்படுபவர்கள். வேற்றுமையற்றவர்கள். பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற தத்துவத்தை நடைமுறையில் கையாளுபவர்கள்! இவ்வளவு முன்னேற்ற நோக்குக்கு மூலகாரணம் சந்த்ராம் ஒருவர் ஒருவரேதான்!

இதற்கென்ன அத்தாட்சி யென்றால் ஹேத்ராம் அவர்களே ஒரு இளந் தோழனை தம் இல்லப் பணிக்கு அமர்த்தி யிருக்கிறார், அப்பையன் சமையல் அறை வேலை முதற்கொண்டு குளியலறைவேலை வரை எல்லா வேலைகளையும் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறான், ஹேத்ராமின் மைந்தர்களில் ஒருவனாகவே அப்பையன் சகல உரிமைகளையும் பெற்றிருக்கிறான். அவன் ஓர் தீண்டப்படாதவன் என்றும் வைதீகர்களால் நாக்கில் நரம்பின்றி சக்கிலி என்றும் அழைக்கப்படுபவன். அவனும் காலில் மிதியடி, பைசாமா, கோட், தலையில் அவனாலுந் தாங்கமுடியாத தலைப்பாகையுடன்தான் காட்சியளிக்கிறான். நிற்க,

அந்த எளிய இல்லங்களில் ஒவ்வொன்றாக நுழைந்து ஏதேதோ பெயர்களை யிட்டு விளித்தார். ஒவ்வொருவராக இவர் **எம். ஏ.** பட்டம் பெற்றவர், இவர் **பி. ஏ.** பட்டம் பெற்றவர், இவர் **இண்டர்** படித்தவர், இவர்களெல்லாம் கல்லூரி படிக்கிறார்கள் — என்றெல்லாம் கூறி அவர்களுக்கு என்னையும், எனக்கு அவர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார் ஹேத்ராம்.

தாழ்ந்த இன மக்கள் நன்கு கல்வி பயின்று, சர்க்கார் பணிமனைகளில் பெரிய பெரிய உத்தியோகங்கள் பார்க்கிறார்கள் என்பது மகிழ்ச்சி யூட்டும் உண்மையாகும். அவர்களது படிப்பிற்கென்றே ஆண்டு தோறும் சந்த்ராம் குடும்பத்தவர்கள் பெரும் பொருளுதவி செய்து உன்னதமான சமூகச் சேவை இன்றளவும் செய்து வருகிறார்கள்.

அவர்களிடம் நான் சந்த்ராமைப்பற்றி என்னென்ன அபிப்பிராயங்கள் கொண்டுள்ளார்கள் என நேரில் கேட்டு அறிந்தேன். அகமகிழ்ந்தேன்.

சந்த்ராமின் அரிய பெரிய சேவைகளாலும், வாழ்க்கையில் முன்னணிக்கு வந்த அவர்கள் சந்த்ராமை அன்புடன் பாபுஜீ! என்றழைக்கிறார்கள். குருஜீ என்று கூறுகிறார்கள். அவ்வளவு மதிப்பு காட்டுகிறார்கள் அம்மக்கள் சந்த்ராம் அவர்களுக்கு!

அதற்கப்புறம் வயல்வெளி! அவரது நிலங்களின் பரப்பையும், எல்லையையும், விளைச்சலையும் காண்பித்தார். அவர் அங்கே அருமையாக வளர்க்கும் மா மரமொன்றையும் காண்பித்து அவை மத்திய ஆசியா பகுதியினின்றும் கொண்டு வந்தேன் என்றார்.

காலைக்கடன் முடிந்து வேலங்குச்சி கொண்டு தந்த சுத்தி செய்து வீடு திரும்பினோம். வழியில் சந்த்ராமின் தம்பிகள் நாதுராம் என்பாரும், துளசிராம் என்பாரும், தௌலத்ராம் என்பாரும், கரும்பாலையில் கருப்பஞ்சாறு பிழித்துக் கொண்டும், வெல்லப்பாகு கூட்டிக் கொண்டும், கூடைகளில் சிறு சிறு வெல்லக் கட்டிகள் வார்த்துக் கொண்டு மிருந்ததைக் காட்டியதோடு அவர்களுக்கும் என்னை அறிமுகப் படுத்தினார் ஹேத்ராம்.

கரும்பு சாப்பிடுகிறாயா என்றார் நாதுராம். வெல்லம் கொடுக்கிறேன் உங்கள் ஊருக்கு கொண்டு போகிறாயா என்று கேட்டார்கள் துளசிராமும், தௌலத்ராமும், அவர்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரியாததால் அவர்களிடம் என்னால் நேரில் பேச வாய்ப்பு இல்லாமற் போய் விட்டது.

கருப்பஞ்சாறு கொடுத்தார்கள். காலையில் வெறும் வயிற்றில் வேண்டாம். அதுதான் அக்கரும்புத் துண்டில் சுவைத்து விட்டேனே என்று கூறி விடை பெற்றுக் கொண்டு ஹேத்ராமுடன் வீடு வந்து சேர்ந்தேன்.

வெந்நீர்! குளிப்பதற்கென்று தனி அறை! அதற்கு உள்தாழ்ப்பாள்! இன்னுமென்ன குறை?

அச்சா! பஹுத் அச்சா! குளிக்கிறேன். என்று குளித்துவிட்டு இடுப்பில் ஒரு நாலு முழ வேட்டியையும் உடம்பில் பனியனையும் போட்டுக்கொண்டு வெளியே வந்தேன்.

சுந்தர்பாய் பாட்டி அப்போதுதான் அங்கு வந்து கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் ஓ! திர்வேடம்! அச்சாமத்ராஸீ! டீக்ஹை! என்றார்கள்.

ஏன்? இடுப்பில் நாலு முழத்துண்டு! உடம்பில் பனியன்! அசல் மத்ராஸ்! அந்த எனது மதராஸ் உடையைக் கண்டு உண்மையில் பெருமைப்பட்டவரும் பாசங்காட்டியவரும் சுந்தர்பாய் பாட்டி (சந்த்ராம் மனைவி ஒருவர்தான், மற்ற ஹேத்ராம் உட்பட அவரது மனைவியும் குழந்தைகளும் தமாஷ் சிரிப்பு சிரித்தார்கள்!

சுந்தர்பாய் பாட்டி விந்திய மலைக்கு இப்பாலுள்ள, தென்னாட்டைச் சார்ந்த மகாராட்டிரத் தேசப் பெண்மணி. நான் விந்திய மலைக்கு இப்பாலுக்கும் அப்பாலுள்ள தமிழ் நாட்டு இளைஞன்.

"நாம் இருவரும் தென்னாட்டவர்கள். இவர்களெல்லாம் 'கோதுமை தின்னும் வடவர்கள்" என்று கூறிப் பெருமை கொண்டாடினதை நான் சுந்தர்பாய் பாட்டியிடங் கண்டு உளங் குழைந்து போனேன். பூரித்து அவர்களை நெஞ்சார நேசித்தேன். அளவிலா பாசத்தால் கட்டுண்டேன். எனது கடைசி நாளாகிய மூன்றாம் நாள் அவர்களிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது என்னை ஆரத்தழுவி எனது முகம் பிடித்து மார்போடு அணைத்தெடுத்து, எங்கள் இருவரின் கண்கலங்க, சென்று வா! கண்மணி! என்று அனுப்பினாரே பாட்டியம்மாள் சுந்தர்பாய், அது எனக்கு மறக்க முடியா சம்பவம்! ஒரே நாட்டவர் என்ற எண்ணம் உதிர்த்துவிட்டால் பாசத்தின் பிடி எத்துணை வலிமையுடையது என்பதை அன்றுதான் அனுபவ ரீதியாக உணர்ந்தேன்.

அந்த வேட்டி, உடைமாற்றி அலங்கரித்துக் கொள்ளுமட்டுந்தான். பிறகு வெள்ளை பேண்ட், கிரீம் கலர் லினென் புஷ்கோட், கழுத்தில் நேவிபுளூ (கெட்டி நீல, ஸ்கார்ஃப், தலையில்ஹேட் இது. இரண்டாம் நாள் உடை.

தலைக்கு எண்ணைக்கு பதிலாக பாமாலிவ் வாஸ்லைன் தைலம் எடுத்துச் சென்றிருந்தேன். அதைப் போட்டு தலை வாரிக் கொண்டிருக்கும் போது பக்கத்தில் நின்று கொண்டிருந்த பாட்டி சுந்தர்பாய், அது என்ன என்று கேட்டார். அவரது மூக்கின் அருகே அத்தைலத்தைக் காட்டினேன். அதன் வாசனையில் லயித்தவராய், நான் கூட என் தலைக்கு போட்டுக் கொள்ளட்டுமா என்று கேட்டார்.

கேட்பானேன். நானே உங்கள் சொத்து! இத்தைலம் எம்மாத்திரம்? உரிமையோடு போடுங்கள் என்றேன் அதைப் போட்டுக் கொண்டு என்ன ஆனந்தப் பட்டார் பாட்டி தெரியுமா?

சரி! காலை உணவு தயார் என்றார் ஹேத்ராம். கொண்டாருங்கள் என்றேன்.

எங்கே கொண்டாருவது? அடுப்பங்கறைக்கே வருங்கள். அம்மா! சுட்டுச்சுட்டுப் போடுவா! நாம் சூடா அப்படியே எடுத்து சாப்பிடுவோம்! என்றார் ஹேத்ராம்,

அங்கே எதற்கு.......? என்று இழுத்தேன். என்னை கைப்பிடித்து இழுத்துக் கொண்டே போய் விட்டார்.

குளித்து விட்டுச் சாப்பிடுவதே ஒரு அலாதிதான்! அப்படிக் கில்லையானால் கூழானாலும் குளித்துக் குடி! என்று ஏன் கூறி வைக்கப் போகிறார்கள்? அதிலும் குளிர் நாட்டில், குளித்த குளிரோடுங் கூட, நெருப்பு அணலில் அடுப்பாங்கறை பக்கமே என்றால் அடக்கமாக, சூடச்சுட ரொட்டி சாப்பிடுகிறதற்குக் கேட்கவா வேண்டும்.

ரொட்டின்னாலும் ரொட்டி அதுதான் ரொட்டி! கையிலெடுத்து ஒரு ஆட்டு ஆட்டினால் ரேடியோ சௌண்ட்-வேவ்ஸ் மாதிரின்னு வளைந்து வளைந்து ஆடுது! நெய் வாடை சொல்லணுமா? அதுவே பாதி பசி போக்கிடுது! நம்ம பக்கத்திலேயும் ரொட்டி சுடுகிறோம். ரொட்டியா அது? விரட்டி! இந்த பண்டாரந் தட்டுறானே, கையில் பிடித்துக் கொண்டு ஜால்ரா தட்டு அது மாதிரி யிருக்கும் இங்கே! ஆனால் அங்கு ரொட்டியின் பக்குவமும், சுவையும் சைட்-டிஷ்ஷூம் பிரமாதம்! பிரமாதம்!! ஆமாம்! இரண்டுக்குமேல் தின்ன (என்னால்) முடியவேயில்லை! திகட்டுது! அது முடிந்ததும், கிண்ணம் நிறைய எருமை மாட்டுத்தயிர்! அங்கு குளிர் அதிகமல்லவா? நன்றாக உரைந்துகிடக்குது! அதை உடைத்தெடுக்க சுத்திதான் வேண்டுமென்பது மிகைபடக் கூறுவதற்கு—ஆனால் ஒரு ஸ்பூன் வைத்துக் கொண்டு அருமையாக ரொட்டிக்குமேலே தள்ளிவிட்டேன் அத்தயிரையும்!

திர்வேடம்! திர்வேடம்!! வா போகலாம்! பிதாஜீ உன்னை அழைத்து வரச் சொன்னார். இரண்டு 'படா ஆத்மீ' வந்திருக்கிறார்கள் உன்னைக் காண வேண்டுமாம்! காத்துக் கொண்டிருக்கிறார்கள்! என்றார் பாட்டி,

உடனே ஹேத்ராம் அவர்களும், நானும் பாட்டியுடன் சென்றோம்.

ஹல்லோ! திர்வேடம்! You look brighter to-day! இன்று நேற்றையவிடத் தெளிவாகக் காண்கிறாய் பார்த்தாயா! இவர்தான் நான் முன்பே கூறவில்லை —**பிஹாரிலால் எம். எ.,** Inspector of Shops & Commercial Establishments, Hoshiarpur. கைகுலுக்கினேன். அறிமுகமானோம். இவர் **தக்கர்தாஸ் பி. ஏ. (ஆனர்ஸ்), பி, லி. எஸ்.** Treasury Officer, Hoshiarpur. கை குலுக்கினேன். அறிமுகமானோம். பிற அடுத்து.

திராவிடப் பூங்கா

"வந்தைவேள்"

பகுத்தறிவு பெற!

நண்பரே! நுமது மகன்தானே அப் பச்சிளம் பாலகன்? இன்னும் மூன்று மாதங்கள் முழுமையாக முடியவுமில்லையே! நீவிர் அச் சிசுவை எறிந்து தரையில் வீசிக் கிடத்தினீர்! அது தானாது வீறிட்டழுவதோடு வழித்த சிறுநீரையும் சொட்டோடு விட்டு நிறுத்திக் கொண்டதே. அதுவுந் தானாது போலும் அலறி அழுகிறது குழந்தை!

நேற்றுதான் நுமது இல்லத்தில் எமக்கு விருந்து படைத்தீர்! எமது பகுத்தறிவுப் பித்துக்கு ஒவ்வாத வகையான விருந்து அது வாயினும், விருந்துண்ண இசைந்தேன்! அது நும் பொருட்டோ அன்று நீவிர் இல்லில் வைதீகப் பார்ப்பனன் கொண்டு நடத்திட்ட, நுமது, கடந்தாண்டு காலஞ்சென்ற தந்தையாரின், தலைதிதி முன்னிட்டோ அல்ல.

பின் எதன் பொருட்டோவெனின், நின் தந்தை எம்மீது வைத்த பாசத்தாலும், கொண்ட அன்பாலும், அவர் நினைவு கூர்ந்தே, பழமை நிகழ்ச்சிபோல், உண்ண ஒப்பினேன். ஆனால் பார்ப்பனன் பண்ணின அத்தனை செயல்களையும் வெறுத்தேன்! வெகுண்டேன்! நின்னை இதுநாள்வரை பழகியும் திருத்திலேனே என மனம் நொந்தேன்.

ஒன்று கூறுகிறேன் உன்னிப்பாய்க் கேளும்! உண்மையையும் உணர்வீராக!

சூதகம் தீர்க்கவென்று கூறி மாட்டு மூத்திரத்தைக் 'கோமியம்' என்றழைத்து, வீடு பூராவும் தெளித்து, நும் தலைமீதும் மாவிலையால் நனைத்து தெளித்திட்டான் அப்பார்ப்பனன்! அதை நீர் அடக்கத்துடனும் பயபக்தியுடனும் மூக்கின்மேல் கை பொத்தி வாயடக்கி ஏற்றுக் கொண்டீர்!

ஆனால் நும் மூன்று மாதங்கூட நிரம்பாத இளவழகன் நெகிழ்த்தி இட்டச் சிறுநீரை—சொற்பச் சொட்டை,—ஏற்க—ஏற்று மகிழ மனம் வராத வராய்—வீசி எறிந்தீர் தரைதனிலே! தூற்றியும் விட்டீர்!

யான் கேட்கிறேன் கூறும்: ஆறறிவு வழித் தோன்றிய மழலையின்ப ஊற்றாம் இளங் குழந்தையிட்ட சிறுநீர் சொட்டு, ஐயறிவு படைத்த மிருக இனமாம் மாட்டின் மூத்திரத்தைக் காணினும் புன்மை வாய்த்ததோ? சொந்த மைந்தனை அறியா ஆரம்பப் பருவத்தில் உதிர்த்த சிறுநீர் சொட்டைக் கண்டு வெகுளும் உம் உள்ளம் மாற்றான், மாட்டு மூத்திரம் என்று அறிந்தே, 'கோமியம்' என்று கூறி உன் தலையில் ஊற்றும்போது ஏன் வெகுண்டெழவில்லை? ஏன் மருட்சி அடைகிறாய்? ஏன் மண்டி யிடுகிறாய் அவன் காலில்?

அங்கேதான் நண்பா நீர் பகுத்தறிவை பாழ்படுத்திக் கொள்ளுமிடம் உள்ளது!

மாட்டு மூத்திரத்தில் சாணத்தையுங் கரைத்து 'அமிர்தம்' என அவ்வைதீகன் வழங்க நீவிர் அதனைத் தெவிட்டாது விழுங்குகிறீரே, அங்கேயுந்தான் நுமது அறவு சுத்தமாக மங்கி விடுகிறது.

மைந்தனின் சிறுநீர் வெகுட்டலானால், அதைவிட வெகுட்டல் அல்லவோ மாட்டுக் கழிவும், கழிவு நீரும்? 'காமதேனு' கற்பனை! சிந்தித்துப் பார் தோழரே! சித்தந் தெளிவீராகுக! பகுத்தறிவு பெறுவீருமாகுக! குறையிருப்பின் மன்னியுங்கள்! வருகிறேன்.

கோவாவே நீ வா!

கோவாவை நினைக்க நினைக்க ஒரு பக்கம் உமிழ்நீர் சுரக்கின்றது! மறுபக்கம் கண்ணீர் பெருகுகிறது!

உமிழ் நீர் சுரக்கச் செய்யுங் கோவா பால் கோவா!

கண்ணீர் உருக்கச் செய்யுங் கோவாவோ, நமக்கு வடக்கே யமைந்த போர்த்துகீசியக் கோவா'வே!

மனிதப்பண்பு அறவே ஒழித்த, அன்னிய மாக்கள் ஆங்கே ஆட்சி புரிகின்றனர்!

ஆட்சியா அது? வெறிக் கோலக்காட்சியாம்! இன்றேல், நிராயுத பாணிகளான, கோவா மீட்சி, அறப்போர் வீரர் — வீராங்கனைகளை, உயிர் பதை பதைக்கச், சுட்டு வீழ்த்திக் குவிப்பரோ, குருட்டுக் கோமான்கள்?

'பெண்ணென்றால் பேயும் இரங்குமே'? அப்பேய்களையும் விட கொடும் பேயர்கள் கோவாவெறியாட்சியாளர் என்பதை மெய்ப்பித்து விட்டார்களே! மதுரைவாழ் சௌராஷ்டிரப் பெண்மணி சுபத்திராதேவியையும் விடவில்லையே! உயிர் தப்பினாராயினும் படுங்காயங்களுடன் மருத்துவச்சாலையில் படுக்கையுடனல்லவோ வாடுகிறார்!

கோவாக் கொடியவர்களைப் பழிக்குப் பழிவாங்க, கோவாவை மீட்க விண்ணதிரும் குரலெழுப்பும் ஓசை. இன்னுமா நும் செவியில் விழவில்லை? ஓ! டில்லி ஆட்சியே!

பிடித்தால் ஒரு பிடி காணுது—கோவணக்கோவா ஆட்சி! அதற்கா அத்துணை இறுமாப்பு? விடுவதா? பொறுத்தது போதும்!...

ஒரு தேதி குறிப்பிட்டு, அத்தேதிக்குள் மூட்டை முடுச்சுகளுடன் ஓட்டம் பிடிக்க வேண்டும்! இல்லையாயின், கோவாவில் உன் கொடி பறக்காது! நீ தான் பறந்தோடு வாய் ...என்று கோவா ஆட்சிக்கு டில்லி ஆட்சி சவால் விட்டே தீர வேண்டும்!

எது வரினும் வரட்டும்! எதிர்த்தே தீருவோம்! என்று ஆட்சியாளர் கூற வேண்டும் அதுபோது உலகத்தையே எதிர்த்து ஒடுக்கக் கூடிய, அத்தனை இந்திய மக்கற் பட்டாளமும், டெல்லி ஆட்சி பக்கம், கட்சி வேறுபாடன்றி, நின்று உரங் கொடுக்குமே!...ஏன் அதைச் செய்யக் கூடாது?

உலக மெலாம் பறந்து சுற்றி சமாதானம் சமாதானம் என்று சொல்லி புகழ்மேல் புகழாக அடுக்கித் திரும்பிய யான் எங்ஙனம் கோவாவில் போர் நிகழ்த்துவது?... என்று தலை சொரிவதில் பயனில்லை.

தத்தளித்துத்துடித்து, வெகுண்டெழுந்து நிற்கின்ற வீரர்களைக் கண்டாகிலும் போக்கைச் சற்று தளர்த்தி போர்முரசு கொட்டியே தீர வேண்டும்—நமது மா மேருவாம் நேரு அவர்கள்! மனம் இடங் கொடாவிடின் அவர் வேற்றாருக்கு இடங் கொடுத்தாகிலும் கோவாவை மீட்கக் கொடி தூக்கச் செய்திடலே வேண்டும்! அதுவல்லது வெறெதுவும் வேண்டோம் என மக்கள் ஓரே குரலுடையோராயுள்ளனர்!

கம்பளிப் பூச்சி போன்ற சின்னஞ் சிறு நாடு போர்த்துகீசிய நாடு! பக்க முள்ள ஸ்பெயின் மறந்தும் ஒரு பெரு மூச்சு விட்டால் போதும்! அடுத்துள்ள ஆழ் கடலில் வீழ்ந்து அமிழ்ந்துபடும்! அப்படிப்பட்ட நாட்டையுடைய சுண்டக்காயர்கள், நம் மண்ணில் நின்று கொண்டு, கோவா போர்த்துகீசிய நாட்டையே சாரும்; இந்தியாவைச் சாரவே சாராது! என்றால் அது மிகு நகைப்புக்குரியதாகும்! அப்படிக் கருத அவர்களை இனியும் நாம் விட்டு வைப்பது அதை விட மிகமிக நகைப்புக்குரிய நிகழ்ச்சியாகும்! எனவே டில்லி ஆட்சி இது சமயம் தலையிடவே வேண்டும்! தக்க நட வடிக்கை எடுத்தே தீர வேண்டும்! விரைவில் கோவா மீட்சியடைந்தே தீர வேண்டும்.

வெற்றி நமதே!

தமிழிற்கு தடை எது?

●

" தமிழன் தமிழனாக வாழ்தல் வேண்டும்; அவன் தன் தாய் மொழியின் சிறப்பை அறிதல் வேண்டும். தமிழிலேயே தனக்குரிய சடங்குகளைச் செய்து கொள்ளல் வேண்டும் " என்று தமிழில் வல்ல சான்றோர் கூறினால் இவர்கள் நாத்திகர் — வடமொழியை வெறுப்பவர்—ஒருமைப் பட்டுள்ள சமுதாயத்தில் வேற்றுமையை உண்டாக்குகின்றனர் என்று ஒரு சாரார் பழி தூற்றுகின்றனர். இவர்களுக்குள்ள நாளிதழ்களின் செல்வாக்காலும், உயர் அலுவலரது மறைமுக செல்வாக்காலும் இச்சான்றோர் பலவாறு அமுத்தப் படுகின்றனர். தமிழுக்குள்ளே அறிவற்ற புல்லுருவிகளை ஏவிவிட்டுத் தூற்றவும் செய்கின்றனர். தமிழ்ச் சான்றோருள் ஒரு சிலர் கூட்டத்திற்கு ஏற்றவாறு பேசிக் கொண்டு வயிற்றைக் கழுவி வாழ்க்கை நடத்துகின்றனர். இக்காரணங்களாற்றான் வெள்ளையன் ஆட்சி ஒழிந்தும், பிறமொழி ஆட்சி தமிழை விட்டு ஒழியவில்லை என்பது கவனிக்கத் தக்கது."

—டாக்டர் மா. இராச மாணிக்கனார்.

நடிப்புப் புலவர் நாடக மன்றம்

●

களஞ்சியம் ஆசிரியர் எ. எஸ். வேணு தீட்டிய 'அவமானச் சின்னம்' (டாக்டரின் மனைவி) நாடகம் 14—8—55 அன்று தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் நாரணதுரைக் கண்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நாடகத்திற்கு ஏராளமான சினிமா நடிகர்கள். பத்திரிகை ஆசிரியர்கள் கலாரசிகர்கள் வந்திருந்து ரசித்தனர். டாக்டராக நடித்த எஸ். எம். சுந்தரமும், வேலைக்காரியாக நடித்த ஆர். காந்திமதியும் சிறப்பாக நடித்தனர்.

தி. மு. க. மாநில மாநாட்டு நிதிக்காக

மலையாண்டிபட்டணம் ராதாகிருஷ்ணா அரங்கில் 6, 7—9—55 தேதிகளில்

●

பைந்தமிழ் நாடக மன்றத்தாரால்

சி. எம். சி. ராசன் வரைந்துள்ள

"சீமான்"

என்னும் சமூக நாடகத்தில் எஸ். வி. அரசு குழுவினரும், தோழியர்கள் கே. டி. தேவகி, கே. டி. சரோஜா, பாபு ஆகியோரும் நடிப்பர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன்; சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை 1.